விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 196 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 19 வியாழக்கிழமை (03.07.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## சிறுவனின் எலும்புக்கூடு உட்பட 4 எச்சங்கள் நேற்று அடையாளம்

### செம்மணியில் தொடரும் அகழ்வுப் பணி

(யாழ்ப்பாணம்)

செம்மணி புதைகுழியில் இருந்து சிறுவன் ஒருவனின் எலும்புக்கூட்டுத் தொகுதி என நம்பப்படும் எலும்புக்கூட்டுத் தொகுதியுடன் நான்கு எலும்புக் கூட்டுத் தொகுதிகள் நேற்றுப் புதன்கிழமை அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியில் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணியின் ஏழாம் நாள் பணிகள் நேற்றுப் புதன்கிழமை முன் னெடுக்கப்பட்டது.

15ஆம் பக்கம் பார்க்க



## 4 எலும்புக்கூடுகள் குழப்பகரமான நிலையில் அகழ்ந்தெடுப்பு

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதை குழியில் 4 எலும்புக்கூடுகள் குழப்பகரமான நிலையில் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ள தாக சட்டத்தரணி ரனிதா

15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணியில் செய்மதிப் படங்கள் அடையாளப்படுத்தப்பட்ட பகுதியில் துப்புரவுப் பணிகள்

(யாழ்ப்பாணம்)

மனிதப் புதைகுழி அடையாளம் காணப்பட்ட யாழ்.செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானத் தில் மேலும் மனிதப் புதைகுழிகள் இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் பகுதிகளிலும் எதிர்வரும் நாட்களில் அகழ்வுப் பணிகளை மேற்கொள்ளும் விதமாக துப்பரவுப் பணி

15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணியில் 37 எலும்புக்கூடுகள் இதுவரை அடையாளம்

(யாழ்ப்பாணம்)

செம்மணி சித்துப்பாத்தி மயான மனிதப் புதைகுழியில் இதுவரை 37 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி அகழ் வுப் பணிகள் தொடர்பாக நேற்று ஊடகங்களுக் குக் கருத்துத் தெரிவித்த

15ஆம் பக்கம் பார்க்க

# செம்மணி புதைகுழி
# அரசு பூரண ஒத்துழைப்பு

### அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ

(கொழும்பு)

செம்மணி மனிதப் புதைகுழி விடயத்தில் அரசாங்கம் பூரண ஒத்துழைப்பைத் தரும் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச் சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரி வித்துள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)



## நெதர்லாந்தில் உள்ள இலங்கையின் பண்டைய பொருட்களை மீளக் கொண்டுவர கலந்துரையாடல்



(கொழும்பு)

நெதர்லாந்தில் உள்ள இலங்கையின் பண்டைய பொருட்களை மீள நாட்டுக்குக் கொண்டு வருவதற்கான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது.

ஜனாதிபதியின் செய

15ஆம் பக்கம் பார்க்க

## சுன்னாகம் - புத்தூர் வீதியில் மோ.சைக்கிள் கோர விபத்து

### இரு இளைஞர்கள் உயிரிழப்பு



(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் - புத்தூர் வீதியில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ள னர்.

16ஆம் பக்கம் பார்க்க



## 2026ஆம் ஆண்டு பட்ஜெட் ஒக்ரோபரில் சமர்ப்பிப்பு

### அமைச்சரவையும் அனுமதி

(கொழும்பு)

2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

"உற்பத்திப் பொருளாதாரம் மற்றும் அனைவரையும் பொரு ளாதார அபிவிருத்தியில் பங்

15ஆம் பக்கம் பார்க்க

## 2 நாட்களுக்குள் இரு பிரபல அரசியல்வாதிகள் கைதாக வாய்ப்பு

(கொழும்பு)

பிரபல அரசியல்வாதிகள் இருவர், இரண்டு நாட்களுக் குள் கைது செய்யப்படுவதற் கான சாத்தியக்கூறுகள் இருப்

15ஆம் பக்கம் பார்க்க

## எலான் மஸ்க்கின் 'ஸ்டார்லிங்க்' இணைய சேவை இலங்கையில் அறிமுகம்

(கொழும்பு)

"ஸ்டார்லிங்க்" இணைய சேவையை இலங்கையில் இனிப் பெற்றுக் கொள்ள லாம் என ஸ்பேஸ் எக்ஸ் உரிமையாளர் எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

ஸ்டார்லிங்க் இணைய சேவை அதி வேகமாக செயற்படக்

15ஆம் பக்கம் பார்க்க



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




வடமராட்சி ஊடக இல்லத்தில் செயலாளராகக் கடமை ஆற்றும் **இரா. மயூதரன்** அவர்கள் பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டு செயற்பட்டு வரும் ஐ.எல்.சி.தமிழ் வானொலியின் 15. ஆவது நிறைவாண்டை முன்னிட்டு இடம் பெற்ற சிறப்பு நிகழ்வின் போது தாயக ஊடகவியலாளராகிய இவருக்கு **மக்கள் குரல் விருது** வழங்கி மதிப்பளிக்கப்பட்டுள்ளது. இவர் இன்னும் பல விருதுகளைப் பெற்று வடமராட்சி ஊடக இல்லத்திற்கு பெருமை தேடித் தருவார் என்று வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொள்கிறோம்.



Best Wishes!

(C-3326)

வாழ்த்துவோர் :
வடமராட்சி ஊடக
இல்லத் தலைவர்

# மரண அறிவித்தல்

பிறப்பு
1942 - 10 - 17

இறப்பு
2025 - 07 - 02



## கதிரேசு செல்லம்மா

சங்கரப்பிள்ளை வீதி ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரேசு செல்லம்மா அவர்கள் நேற்று 02.07.2025 புதன்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் அமரர் கதிரேசு அவர்களின்பாசமிகு மனைவியும் சடையன் - புவனேஸ்வரி தம்பதியரின் செல்வப் புதல்வியும் சின்னத்தம்பி - ஸ்ரீவள்ளி தம்பதியரின் அன்பு மருமகளும் விஜயசுகுமாரி(ஓய்வுபெற்ற PHM), விஜயசுகுமார்(குடிசார் படவரைஞர்), விஜயராணி(பிரான்ஸ்), சரவணபவன்(ஆசிரியர் மட்டக்களப்பு), சிவகுமார்(பிரான்ஸ்), சசிகுமார் (சுவிஸ்), யசிந்தன்(ஆசிரியர் - யா/புங்குடுதீவு ஸ்ரீகணேச மகா வித்தியாலயம்), ஆகியோரின் அன்புத் தாயாரும் தங்கவேலு சசிகலாராணி(ஓய்வுபெற்ற PHM), முருகையா(பிரான்ஸ்), கஸ்தூரி(விரிவுரையாளர் - மட்டக்களப்பு), பிரமிளா(பிரான்ஸ்), வாசுகி(சுவிஸ்), தயாழினி(ஆசிரியர் - யா/மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோ.க.த.க பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் கனீசாந்(மருத்துவர்), விசாலி, ஆருதி, விர்த்தகி (பிரான்ஸ்), தினக்சன்(மாணவன் - மட்டக்களப்பு), அபின், ஆரூரன், அகரன் (பிரான்ஸ்), சன்சியா, சாருயன்(சுவிஸ்), துஷாரா(மாணவி - யா/மானிப்பாய் சோதி வேம்படி), ஜனனி(மாணவி - யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம், கிருஸ்ணன், தர்மலிங்கம், வேராசி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 03.07.2025 வியாழக்கிழமை மு.ப 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்லுண்டாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(4697) தகவல்: குடும்பத்தினர்

# எரிபொருள் விலை அதிகரிப்பை தவிர்க்க முடியாமல் போயுள்ளது

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

(கொழும்பு)

எரிபொருள் விலை அதிகரிப்பை தவிர்க்க முடியாமல் போயுள்ளது என அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நேற்று (02) நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜூன் மாதத்தில் ஏற்பட்ட விலைத் தளம்பலுக்கேற்பவே ஜூன் 30 ஆம் திகதி விலையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அவ்வாறான நடைமுறையே பின்பற்றப்படுகிறது. மாதத்தின் தொடக்கத்தில் விலை குறைவடைந்தால் அதன் பலனை மாத இறுதியில் எதிர் பார்க்கலாம்.

இவ்வாறே விலைச் சூத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் கடந்த அரசாங்கத்தில் இறக்குமதியின் போது ஏற்படுத்தப்பட்ட மோசடி இன்றும் எம்மை பின் தொடர்ந்து வருகிறது.

அவர்கள் சென்றாலும் அவர்களால் எரிபொருள் கூட்டுத்தாபனத்தில் ஏற்படுத்தப்பட்ட நட்டத்தை நாம் சரி செய்யும் போது இவ்வாறான செயற்பாடுகள் தவிர்க்க முடியாமல் போய் விடுகிறது என நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டுள்ளார். (ம-7)

மட்டக்களப்பு நாகதம்பிரான் ஆலயத்தில்

# மின்சாரம் தாக்கியதில் 16 வயது சிறுவன் பலி



மட்டக்களப்பு - முனைக்காடு நாகதம்பிரான் ஆலயத்தில் மின்சாரம் தாக்கி 16 வயதுச் சிறுவன் உயிரிழந்துள்ளான்.

கொக்கட்டிச்சோலை முனைக்காடு கிராமத்தில் அமைந்துள்ள நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் இடம்பெற்று வருகிறது.

நேற்றுப் புதன்கிழமை (02) அதிகாலை விசேட பூசை இடம்பெற்ற நிலையில் பாம்புப் புற்றுக்கு பாலூற்றி விட்டு அதனருகில் நின்ற சிறுவன், மின்குமிழுடன் இணைக்கப்பட்டிருந்த மின் வடத்தில் மின் ஒழுக்கு ஏற்பட்டதில், மின்சாரத்தினால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளான்.

உயிரிழந்தவர் முனைக்காடு கிராமத்தைச் சேர்ந்த 16 வயதான செந்தில்குமரன் கியோபன் எனத் தெரிவிக் கப்படுகிறது.

குறித்த சிறுவன் நாகதம்பிரான் ஆலயத்தில் சிறு வயது முதல் தொண்டாற்றி வருபவன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

சுங்கத் திணைக்களத்தால்

# 60 மில்லியன் பெறுமதியான போதைப்பொருள் பறிமுதல்

(கொழும்பு)

கடந்த 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 2025 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையான காலப்பகுதியில் 60 மில்லியன் பெறுமதியான போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்று சுங்கத் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு கார்கோ எக்ஸ்பிரஸிக்கு கொண்டுவரப்பட்ட பொதிகளிலிருந்து 60 மில்லியன் ரூபாய் பெறுமதியான போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

சூட்சுமமான முறையில் பொதிகளுக்குள் மறைத்து வைத்துப் போதைப்பொருட்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாக, மேலதிக சுங்கப் பணிப்பாளர் சீவலி அருகோட தெரிவித்துள்ளார்.

இதன்படி குறித்த பொதிகளிலிருந்து 1,101 கிராம் கொக்கைன் ரக போதைப்பொருளும், 1,666 கிராம் குஷ் ரக போதைப் பொருளும் பறிமுதல் செய்யப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

# புலோலி அறிவகம் சனசமூக நிலையம் 70 வது ஆண்டு நிறைவு விழா

## சிறுவர் நாடகப்போட்டிக்கான விண்ணப்பம் கோரல்

எமது நிலையத்தின் 70வது ஆண்டுநிறைவு விழாவை முன்னிட்டு சிறுவர் நாடகப்போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
நாடகப்போட்டி எதிர்வரும் 23.07.2025 இரவு நடைபெறும்.
பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்.
கலந்துகொள்ள விரும்புபவர்கள் எதிர்வரும் 16.07 2025ற்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவும்.

மேலதிக விபரங்களுக்கு **077 188 0896, 076 670 3648** என்ற எண்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்.

நிர்வாகம்
அறிவகம் சனசமூக நிலையம்
மந்திகை, புலோலி.

(C-3328)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி கிடைக்க வேண்டும்!

## தென் பகுதியில் இருந்து ஒலித்த குரல்

**(கொழும்பு) ..............................**
**யாழ்ப்பாணம் செம்மணி பகுதியில் கொடூரமாக கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டவர்களுக்கு நீதியை இந்த அரசாங்கம் பெற்றுக் கொடுக்க வேண்டும் என தென்பகுதி சிங்கள சமூக செயற்பாட்டாளரான அர்ஜுன தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணம் - செம்மணி பகுதியில் மனித எலும்புக்கூடுகள் அகழப்படுகின்றன. இதில் சிறுவர்கள், பெரியோர்கள் என கொடூரமாக கொலை செய்யப்பட்ட 33 இற்கு மேற்பட்ட எலும்புக்கூடுகள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த பிரச்சினையில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம்.

இந்த விடயம் குறித்து சிங்கள மக்களாகிய நாங்களும் தமிழ் மக்களுடன் இணைந்து ஒன்றாக இருக்கின்றோம். யுத்த காலத்தில் ஏராளமானோர் காணாமல் ஆக்கப்பட்டார்கள்.

அவர்களது குடும்ப உறுப்பினர்கள் நீண்ட காலமாக அவர்களை தேடும் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

எனவே இந்த புதிய அரசாங்கத்திடம் நாங்கள் கேட்பது என்னவெனில், இதற்கு ஒரு தீர்வினை வழங்குங்கள்.

புதிய அரசாங்கத்திடம் இருந்து இந்த பிரச்சினைக்கு தீர்வு கிடைத்தால்தான் மக்களுக்கு தீர்வு கிடைக்கும் என சமூக செயற்பாட்டாளரான அர்ஜுன தெரிவித்துள்ளார். (நி)



## போலி டொலர்களுடன் சிக்கிய நபர்

### அதிர்ச்சியில் வங்கி அதிகாரிகள்

(கொழும்பு)

இலங்கையில் போலி அமெரிக்க டொலர்கள் பாவனை தொடர்பில் வங்கி அதிகாரிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

மினுவாங்கொட பகுதியிலுள்ள வங்கியொன்றில் அதனை மாற்ற வந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ரஸ்நாயக்கபுர பகுதியில் வசிக்கும் 45 வயதான நபரே இந்த மோசடி குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மினுவாங்கொட பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் பிற்பகல் மினுவாங்கொடை நகரில் உள்ள ஒரு வங்கியில் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது 100 அமெரிக்க டொலர்கள் பெறுமதியான ஆறு போலி டொலர் தாள்கள் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.


சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)


# மணிவிழாநாளில் பணி நயந்து வாழ்த்துகிறோம்



**திரு. நாகேந்திரம் கணேஸ்வரநாதன் (SLPS-I)**
**கோட்டக் கல்விப் பணிப்பாளர்-பூநகரி**

**காலம்-03.07.2025**
**இடம்- கிளி/பூநகரி மத்திய கல்லூரி**



**சேவை விபரம்**

கிளி/ முழங்காவில் ம.வி - ஆசிரியர் - 06.08.1988 - 14.01.1990
யாழ்/ பலாலி ஆ.ப.கலாசாலை - 15.01.1990 - 31.12.1991
கிளி/ முழங்காவில் ம.வி.- ஆசிரியர் - 01.01.1992 - 08.02.1993
கிளி/ பூநகரி நல்லூர் ம.வி - ஆசிரியர் - 09.02.1993 - 02.05.1995
கிளி/ சாமிப்புலம் அ.த.க. பா- கடமை நிறைவேற்று - அதிபர் - 03.05.1995 - 04.01.1998
கிளி/ செல்விபுரம் அ.த.க.பா -கடமை நிறைவேற்று அதிபர் - 05.01.1998 - 14.12.2001
கிளி/ செல்விபுரம் அ.த.க.பா - அதிபர் - 15.12.2001 - 05.01.2003
கிளி/ பூநகரி நல்லூர் ம.வி - அதிபர் - 06.01.2003 - 09.01.2007
கிளி/ உருத்திரபுரம் ம.வி - அதிபர் - 10.01.2007 - 15.07.2010
கிளி/ பளை மத்திய கல்லூரி - உப. அதிபர் - 16.07.2010 - 05.01.2012
கிளி/ பொன்னாவெளி சைவப்பிரகாச வித்தியாலயம் - அதிபர் - 06.01.2012 - 21.08.2012
கிளி/ அன்னை சாரதாதேவி வித்தியாலயம் - அதிபர் - 22.08.2012 - 01.07.2015
கிளி/ பாரதி வித்தியாலயம் - அதிபர் - 02.07.2015 - 23.02.2020
கிளி/ வட்டக்கச்சி ம.வி - பிரதி அதிபர் - 24.02.2020 - 19.05.2020
கோட்டக்கல்வி பணிப்பாளர் பூநகரி - 20.05.2020 - இன்று வரை




**37 ஆண்டுகள் நிறைவான கல்விப்பணியாற்றி பணி ஓய்வு பெறும் மணிவிழா நாயகனின் பணி நயந்து வாழ்த்துவதோடு அவரது ஓய்வுக் காலம் சிறக்கவும் வாழ்த்துகின்றோம்.**

(ி-3320)

**அதிபர்கள், ஆசிரியர்கள், பூநகரிக் கோட்டம்.**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## சர்வதேச கராத்தே போட்டியில் வடக்கிற்கு மூன்று வெண்கலம்



தாய்லாந்து நாட்டில் கடந்த மாதம் நடைபெற்ற சர்வதேச கராத்தே போட்டியில் 14 நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் பங்குபற்றியிருந்தார்கள் இதில் இலங்கை கராத்தே தோ சம்மேளன தேசிய அணி சார்பாக வடமாகணத்திலிருந்து மூன்று வீரர்கள் பங்குபற்றி வெண்கலப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளனர்.

யாழ்/பரியோவான் கல்லூரியைச் சேர்ந்த வி.தமிழ் நிலவன், ஜெ.தமிழ்ச் செல்வன் மற்றும் யாழ்/ பத்திரிசியார் கல்லூரியைச் சேர்ந்த ஆர்.பியன்பெனோ ஆகிய மூன்று மாணவர்களுமே இந்தச் சாதனையை நிலைநாட்டியுள்ளனர்.

சாதனையீட்டிய மாணவர்கள்.வடமாகாண கராத்தே சம்மேளனத்தினர் மற்றும் பாடசாலை சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (3)



யாழ் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட இறுதிப்போட்டியில் மருதங்கேணி பிரதேச செயலக அணியை எதிர்த்து கரவெட்டி பிரதேச செயலக அணி மோதியது. இறுதியில் 4:0 என்ற கோல் கணக்கில் மருதங்கேணி அணியை வீழ்த்தி கரவெட்டி பிரதேச செயலக அணி சம்பியனானது.

## கிளப் கால்பந்துத் தொடர் மெஸ்சி அணி வெளியேற்றம்



கிளப் அணிகளுக்கான 21 ஆவது உலகக் கோப்பை கால்பந்துப் போட்டி அமெரிக்காவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. 32 அணிகள் பங்கேற்ற இந்த போட்டியில் லீக் சுற்று முடிவில் 16 அணிகள் அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றன.

இதில் ஜார்ஜியாவில் நடந்த ஒரு ஆட்டத்தில் மெஸ்சி தலைமையிலான இண்டர் மியாமி அணி, பாரிஸ் செயிண்ட்-ஜெர் மைன் உடன் மோதியது.

தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய பாரிஸ் செயிண்ட்-ஜெர்மைன் அடுத்தடுத்து கோல்கள் போட்டு அசத்தியது. இண்டர் மியாமி அணி பதில் கோல் அடிக்க எவ்வளவோ முயற்சித்தும் அந்த அணியால் ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை. முடிவில் பாரிஸ் செயிண்ட்-ஜேர்மைன் 4-0 என்ற கோல் கணக்கில் இண்டர் மியாமி அணியை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியது. தோல்வியடைந்த இண்டர் மியாமி அணி தொடரிலிருந்து வெளியேறியது. (3)

## முதல் டெஸ்ட் தொடரில் சிம்பாப்வே அணியை வீழ்த்தி தென்னாபிரிக்கா அபார வெற்றி



தென்னாபிரிக்கா மற்றும் சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்கா அணி 328 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது. போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி தமது முதலாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா அணி 9 விக்கெட்டுகளை இழந்து 418 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதனையடுத்து முதலாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி 251 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

இதற்கமைய 167 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 369 ஓட்டங்களைப் பெற்றுக் கொள்ள, சிம்பாப்வே அணிக்கு 537 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இந்தநிலையில் வெற்றி இலக்கை நோக்கி இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி 208 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்து தோல்வியைத் தழுவியது.

இதன்படி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1 - 0 என்ற அடிப்படையில் தென்னாபிரிக்கா அணி முன்னிலையில் உள்ளது. (3)

## வலைப்பந்து சம்பியன்ஷிப் போட்டி அரையிறுதி வாய்ப்பை இழந்தது இலங்கை



தென் கொரியாவில் நடைபெற்று வரும் ஆசிய இளையோர் வலைப்பந்து சம்பியன்ஷிப் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற சிங்கப்பூருக்கு எதிரான ஆட்டத்திலும் தோல்வியை சந்தித்த இலங்கை அணி அரையிறுதிக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்துள்ளது.

கடந்த முறை தொடரில் இறுதிப் போட்டி வரை முன்னேறிய சிங்கப்பூரை தீர்க்கமான ஏ குழுவுக்கான போட்டியிலேயே இலங்கை அணி எதிர்கொண்டது. எனினும் மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்திய இலங்கையின் இளம் வீராங்கனைகள் போட்டியில் 19-60 என தோல்வியை சந்தித்தனர்.

இந்தத் தொடரில் இலங்கை அணி வலுவான ஆரம்பத்தைப் பெற்றதோடு முதல் இரு போட்டிகளிலும் ஹொங்கொங் (50-31) மற்றும் இந்திய (71-30) அணிகளை இலகுவாக வீழ்த்தி முன்னேற்றம் கண்டது. எனினும் கடந்த திங்கட்கிழமை நடந்த நடப்புச் சம்பியன் மலேசிய அணிக்கு எதிரான போட்டியில் 40-60 என தோல்வியை சந்தித்தது பெரும் பின்னடைவாக அமைந்தது.

இந்நிலையில் சிங்கப்பூரிடம் தோல்வியை சந்தித்திருக்கும் இலங்கை அணி சம்பியன் பட்டத்தை வெல்லும் வாய்ப்பை மீண்டும் ஒருமுறை தவற விட்டுள்ளது. கடந்த முறை சிங்கப்பூரை இறுதிப் போட்டியில் வீழ்த்தி மலேசிய அணி சம்பியன் பட்டத்தை வென்ற நிலையில் இலங்கை அணி மூன்றாம் இடத்தைப் பிடித்திருந்தது.

ஆசிய இளையோர் வலைப்பந்து சம்பியன்ஷிப் போட்டியில் இலங்கை அணி இதற்கு முன்னர் 1998, 2002 மற்றும் 2015 இல் சம்பியன் பட்டத்தை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



மன்னார் மடு மாதா திருத்தலத்தின் ஆடி மாத திருவிழா நேற்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. மன்னார் மறைமாவட்ட ஆயர் அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில், திருவிழா திருப்பலியை தொடர்ந்து மடு அன்னையின் திருச்சொரூப ஆசீர்வாதம் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது. (படங்கள்: ஜோசப்நயன்)

# வெளிநாட்டு பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு; உதவித் தொகை வழங்க அமைச்சரவை ஒப்புதல்

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு வெளிநாட்டுப் பல்கலைக் கழகத்தில் முதல் பட்டப்படிப்பைத் தொடர உதவித்தொகை வழங்குவதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் கொள்கை அறிக்கையின்படி "நாகரிகமான பிரஜை - முன்னேற்றகரமான மனித வளத்தை" உருவாக்கும் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக இந்த திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

அதாவது, உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு உயர் சர்வதேச தரவரிசையில் உள்ள வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் முதல் பட்டப்படிப்பைத் தொடர உதவித்தொகை வழங்கும் திட்டத்தை செயற்படுத்த 2025 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மூலம் 200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)


## வேலைவாய்ப்புகள்

| | |
|---|---|
| Video Editor | : 0760116820 |
| Photoshop Editing (Nelliady) | : 0779598521 |
| Production Assistant | : 0773501095 |
| கல் அரியும் வேலையாட்கள் | : 0776669766 |
| Sales Girls | : 0772619590 |
| Receptionist (Kilinochchi) | : 0773501095 |
| Marketing Executive/ Freelancer | : 0707555755 |
| தளபாட நிலைய வேலை(ஆண்கள்) | : 0769158453 |
| Album Designing (Nelliady) | : 0759598621 |
| Sales Officer | : 0761490770 |
| Waiter | : 0779567526 |
| Filter Water Shop | : 0764084333 |
| Event Planner | : 0777750318 |
| Sales Manager(Basic 90,000) | : 0770079053 |


வேலைவாய்ப்பு வட்சப் குரூப்ல் இணைய மற்றும் மேலதிக
வேலைவாய்ப்புகளுக்கு: dewmasweb.com
வேலையாட்கள் தேவையா: 0760984532
DEWMAS, 51, Amman Road, Nallur (4687)


## 1 ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர்

**வைரமுத்து தவரத்தினம்**

[ஓய்வு நிலை உதவி முகாமையாளர்-மக்கள் வங்கி]



அன்னை மடியில் 1941.10.01

இறைவன் அடியில் 2024.07.14

ஆண்டு ஒன்று ஆனதப்பா
ஆனாலும் எம் மனங்களில்
விட்டகலவில்லை உம் நினைவுகள்

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(1283)

# இராசிபலன்

03.07.2025
ஆனி 19, வியாழக்கிழமை
அட்டமி பிற்பகல் 4.19 மணிவரை

அத்தம் பிற்பகல் 4.22 மணிவரை
சுப நேரம் 7.27-8.57 மணிவரை
இராகுகாலம் 1.27-2.57 மணிவரை

சந்திராஷ்டமம்
சதயம், பூரட்டாதி

வளவன்

**மேஷம்** கடுமையான எதிர்ப்புக்கள் கூட திடீரென சாதகமாகிவிடும், செய் தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள்.

**ரிஷபம்** எதிர்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள்.

**மிதுனம்** புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், நினைத்த காரியம் நிறைவேறும் நாள், பெற்றோர் மீது பிரியம் கூடும்.

**கடகம்** வீட்டில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**சிம்மம்** நினைத்தது நடந்து நிம்மதி காணும் நாள், வெளியூர் பயணங்களால் நன்மையுண்டு, வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், வாக்கு மேன்மையுண்டு.

**கன்னி** பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், நல்லவர்கள் தொடர்புகள் கிடைக்கும், கல்யானக் கனவுகள் நனவாகலாம், கற்பனை மிகுதியான நாள்.

**துலாம்** உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும், சுப விரயங்களில் தாராளம் காட்டுவீர்கள், புதிய பொறுப்புக்களும் சுமைகளும் அதிகரிக்கும்.

**விருச்சிகம்** தொலைபேசி வழியில் உள்ளம் மகிழும் செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தினர் உங்களை புரிந்து கொண்டு நடப்பர், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**தனுசு** பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், உறவினர்கள் உங்களின் மனம் போல் நடந்து கொள்வர்.

**மகரம்** செய்யும் காரியங்களில் உங்களின் திறமை மேம்படும், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், பகையொன்று நட்பாகலாம், பொது நல ஈடுபாட்டில் புகழ் பெறுவீர்கள்.

**கும்பம்** வரவும் செலவும் சமமாகும் நாள், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, தொழிலில் கவனம் தேவை, உடல் நலனில் கவனம் எடுக்கும் நிலை ஏற்படலாம்.

**மீனம்** குடும்ப பெரியவர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், நிதி நிலை உயர்ந்து நிம்மதி கிடைக்கும், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**கோபத்தைப் [illegible] மீறாமல் பார்த்துக்கொள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமையாக செயற்பட்டால் மாத்திரமே மக்களுடைய தேவைகளை நிறைவேற்றலாம்

## சாவகச்சேரி நகரசபை தவிசாளர்



(சாவகச்சேரி)

யாழில் உள்ள சபைகள் அனைத்துமே பலவீனமான கூட்டு சபைகளாக காணப்படுவதனால் சபையில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் அனுசரித்துச் செல்லாவிட்டால் எமது இலக்கில் வெற்றி காண முடியாது என சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் வ.ஸ்ரீபிரகாஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த 30 ஆம் திகதி சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற கன்னி அமர்வில் தலைமையுரை ஆற்றிய போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

கட்சி என்பது மனதில் இருக்க வேண்டும் சபையில் அதனை நிலைநிறுத்தி பிளவுகளை ஏற்படுத்தக் கூடாது.

இந்த சபை ஒரு கூட்டுக் குடும்பமாக அடுத்த நான்காண்டுகள் செயற்பட வேண்டும்.

உறுப்பினர்கள் ஆக்கபூர்வமான, சுயநலன் அற்ற பொதுநலன் கருதிய விடயங்களை முன்நிறுத்தி தீர்மானங்களை எட்ட ஒத்துழைக்க வேண்டும்.

ஒரு கூட்டுக் குடும்பமாக செயற்பட்டால் மாத்திரமே எம்மை நம்பி வாக்களித்த மக்களுடைய தேவைகளை வினைத்திறனாக நிறைவேற்ற முடியும்.

சாவகச்சேரி நகரசபை மிகவும் தொய்வான ஒரு நிலைமையில் இருப்பதாக மக்களுடைய எண்ணப்பாடுகள் காணப்படுகின்றன. நகராட்சி மன்றத்தையும் நகரையும் கட்டியெழுப்ப வேண்டிய தேவைப்பாடு எமது சபைக்கு காணப்படுகின்றது. சாவகச்சேரி நகர் 2000ஆம் ஆண்டு யுத்தத்தில் அழிவடைந்ததன் பிற்பாடு சோபையிழந்து காணப்படுகின்றது. அதனை மீட்டெடுக்க கடந்த காலங்களில் சரியான சந்தர்ப்பங்கள் அமையவில்லை.

அதேநேரம் அரசு உதவ முயற்சித்தாலும் நாட்டினுடைய பொருளாதார சூழல் அதற்கு சவாலாக இருக்கும். எனவே எமது வருமானத்தை உயர்த்தி நகரினைக் கட்டியெழுப்ப வேண்டும்.

சாவகச்சேரி நகரசபை நிறைவான வருமானத்தைக் கொண்டுள்ளது. எனவே சிறப்பான செயற்பாடுகளை முன்னெடுக்க இயலும்.

எமது செயற்பாடுகளே அரசியல் புனிதமானதா அல்லது சாக்கடையா? என்பதனைத் தீர்மானிக்கும். உள்ளூராட்சி சபைகளே அரசியலுக்கான அடித்தளம். எனவே உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் முன்மாதிரியானவர்களாக இருக்க வேண்டும்.

அரசியல் நாகரீகத்தை உள்ளூராட்சி சபைகளில் இருந்து கட்டியெழுப்ப வேண்டும் என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (8-30)

# அன்னை சிவத்தமிழ் செல்வியின் 17 ஆவது ஆண்டு குருபூசை



(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான முன்னாள் பெருந்தலைவர் அன்னை சிவத்தமிழ் செல்வி. துர்க்கா துரந்தரி பண்டிதை கலாநிதி. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பதினேழாவது ஆண்டு குருபூசை வைபவம் எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் இடம்பெறவுள்ளது.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக இலத்திரனியல், பௌதிகத்துறை பேராசிரியர் மு.தணிகைச்செல்வன், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக உடலியங்கியல், மருத்துவபீட விரிவுரையாளர் வைத்தியர் பே.டினேஷன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (8-3)



கம்பர்மலை கலாவாணி முன்பள்ளி மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டி நிகழ்வு கரவெட்டி பிரதேச சபை உறுப்பினர் சி. தயானந்தராசா தலைமையில், கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. (படம்:மகாலிங்கம்)




வடக்கு மாகாண அரச கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் வருடாந்த மாநாடு நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் இடம்பெற்றது. நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்திருந்தார். (படம்:சிவசாந்தன்)

# தனியார் காணி ஒன்றில் குண்டுகள் மீட்பு!



(தருமபுரம்)

மருதங்கேணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முள்ளியடி வெற்றிலைக்கேணிப் பகுதியில் தனியார் காணி ஒன்றில் குண்டுகளும் அமுக்கவெடி ஒன்றும் நேற்றைய தினம் மீட்கப்பட்டுள்ளன.

காணி உரிமையாளர் தனது காணியினை துப்புரவு செய்த பொழுது மண்ணுள் புதையுண்ட நிலையில் யுத்த காலத்தில் கைவிடப்பட்ட குண்டுகள் மீட்கப்பட்டன.

காணி உரிமையாளர் மருதங்கேணி பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கு அமைவாக கிளிநொச்சி நீதிமன்ற அனுமதியினை பெற்ற பின்னர் செயலிழக்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக மருதங்கேணி பொலிஸார் தெரிவித்துள்ளனர். 360 மில்லி மீற்றர் மூன்று குண்டுகளும் அமுக்க வெடி ஒன்றும் இங்கு காணப்பட்டுள்ளது. (8-[illegible])

## பரிசளிப்பு விழாவும் திறப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

யா/வீமன்காமம் மகா வித்தியாலய பரிசளிப்பு விழாவும் திறன் வகுப்பறை திறப்பு விழாவும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சிவராசா மண்டபத்தில் பாடசாலை அதிபர் திருமதி. பிரதா கிரிதரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.சிவனேசன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய கணித ஆசிரிய ஆலோசகர் க.ஆதீத்தன், கௌரவ விருந்தினர்களாக பழைய மாணவன் சீ.சிவச்செல்வச்சந்திரன் மற்றும் சன்றிச் மஸ்கட் நிறுவன முகாமையாளர் கே.செந்தில்ராஜா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் ஆசியுரையினை மாவை ஆதீனம் பிரதான சிவாச்சாரியார் இளவரசர் ஷ.இ.ஞானஸ்கந்தக் குருக்களும் நினைவுப் பேருரையினை பழைய மாணவன் ஆ.திருமூலனும் நிகழ்த்தவுள்ளனர். (3)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 300 | 350 | 350 | 350 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 450 | 450 | 700 | 500 | 700 |
| தக்காளி | 250 | 300 | 350 | 170 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 300 | 280 | 280 | 240 |
| கோவா | 350 | 400 | 400 | 280 | 350 |
| கரட் | 400 | 450 | 500 | 350 | 400 |
| பூசணி | 180 | 180 | 150 | 120 | 200 |
| புடோல் | 120 | 150 | 200 | 100 | 250 |
| வாழைக்காய் | 120 | 100 | 100 | 80 | 160 |
| சின்ன வெங்காயம் | 350 | 150-400 | 400 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 140 | 160 | 130 | 120 | 140 |
| பாகற்காய் | 650 | 600 | 700 | 750 | 600 |
| வெண்டக்காய் | 150 | 150 | 200 | 120 | 250 |
| கருணைக் கிழங்கு | 350 | 350 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 300 | 400 | 300 | 350 | 300 |
| லீக்ஸ் | 300 | 400 | 400 | 250 | 300 |
| பீற்றூட் | 250 | 300 | 350 | 250 | 300 |
| கறிமிளகாய் | 700 | 800 | 700 | 500 | 800 |
| முருங்கைக்காய் | 1000 | 1000 | 1000 | 600 | 1000 |
| போஞ்சி | 600 | 650 | 800 | 500 | 700 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | 350 | -- | 300 |
| கீரை - 1 பிடி | 120 | 60-120 | 200 | 60 | 80 |
| தேசிக்காய் | 350 | 300 | 350 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 250 | 80-160 | 150-200 |
| இராசவள்ளி | 650 | 700 | 600 | 500 | 700 |
| வெங்காயப்பூ | 600 | 600 | 600 | -- | 500 |
| முள்ளங்கி | 200 | 150 | 200 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 200 | 200 | 150 | 100 | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்து வசதியின்மையால் மாணவர்கள் பாதிப்பு!

**(கண்டாவளை)**

**முல்லைத்தீவு மாந்தை கிழக்கு சிறாட்டிகுளம் மற்றும் எருவில் ஆகிய கிராமங்களுக்கான போக்குவரத்து வசதிகள் இன்மை காரணமாக 50இற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் பாடசாலைகளுக்கு சென்று வருவதில் நாளாந்தம் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.**

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சிறாட்டிகுளம் மற்றும் எருவில் ஆகிய கிராமங்களிலிருந்து 32 வரையான மாணவர்களும் எருவில் கிராமத்தில் இருந்து 27 வரையான மாணவர்களும் சுமார் எட்டு கிலோமீற்றர் தூரம் பெரும் கஷ்ரங்களுக்கு மத்தியில் நட்டாங்கண்டல் மற்றும் பாண்டியன் குளம் ஆகிய பாடசாலைகளுக்குச் சென்று வருகின்றனர்.

குறித்த பிரதேசங்களுக்கான போக்குவரத்து வசதியின்மை, பிரதான வீதி புனரமைக்கப்படாமை என பல்வேறு காரணங்களால் இந்த மாணவர்கள் மேலும் சிரமங்களை எதிர் நோக்கி வருவதுடன் குறித்த பிரதேசத்திலே வாழுகின்ற மக்களும் முதியவர்கள் மற்றும் ஏனையவர்களும் பெரும் சிரமங்களுக்குள்ளாகி வருகின்றனர் (8-315)



## ரயிலுடன் மோதியது மோட்டார் சைக்கிள் — தாயும் மகளும் படுகாயம்

(வவுனியா)

ரயிலுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் தாயும் மகளும் என இருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் வவுனியா - ஓமந்தை பறநாட்டான்கல் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

ஓமந்தையிலிருந்து பயணித்த மோட்டார் சைக்கிள் ஏ-9 வீதியிலிருந்து பறநாட்டான்கல் வீதிக்கு ஏறமுற்பட்ட வேளை, யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலுடன் மோதியதில் விபத்துக்குள்ளாகியது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த தாயும் மகளும் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் மோட்டார் சைக்கிளும் பலத்த சேதங்களுக்குள்ளாகியுள்ளது.

விபத்தையடுத்து 20 நிமிடங்கள் தாமதமாகி குறித்த ரயில் கொழும்பு நோக்கி பயணித்தது. சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், விபத்து தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

மேலும் விபத்து இடம்பெற்ற குறித்த ரயில் கடவை ஓர் பாதுகாப்பற்ற ரயில் கடவையாகும் என்பதுடன் அது குறித்த எச்சரிக்கை பதாதைகளும் அங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-250)

## சாவகச்சேரியில் அம்மாச்சி உணவகம் நகரசபையில் தீர்மானம்

(சாவகச்சேரி)

பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு மற்றும் சாவகச்சேரி நகரசபையின் நிதி ஆகியன மூலம் சாவகச்சேரி நகரசபைக்கு உரித்தான மடத்தடிப் பகுதியில் உள்ள காணியில் அம்மாச்சி உணவகம் அமைக்க நகரசபையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த 30 ஆம் திகதி திங்கட்கிழமை நகரசபையில் இடம்பெற்ற கன்னி அமர்வின் போதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச செயலகம் ஊடாக சாவகச்சேரி நகரசபைக்கு கிடைக்கப்பெற்ற அர்ச்சுனா எம்.பியின் 3.2 மில்லியன் ரூபாய் நிதி மற்றும் சாவகச்சேரி நகரசபையின் 2.8மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடுகள் மூலம் மடத்தடிப் பகுதியில் அம்மாச்சி உணவகத்தை அமைக்க சபையில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி உணவகத்தை சாவகச்சேரி நகரசபைக்கு உரித்தான நுணாவில் சிறுவர் பூங்கா காணியில் அமைக்க தவிசாளர் விருப்பம் தெரிவித்த போதிலும் ஒரு சில சபை உறுப்பினர்கள் அதனால் சிறுவர் பூங்காவின் தனித்துவம் பாதிப்படையும் எனச் சுட்டிக்காட்டப்பட்ட நிலையில் மடத்தடிப் பகுதியில் அமைப்பதென முடிவெடுக்கப்பட்டது.

இந்த அம்மாச்சி உணவகம் ஊடாக பெண் தலைமைக் குடும்பங்களுக்கு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க முடியும் எனவும் தவிசாளர் ஸ்ரீபிரகாஷ் தெரிவித்திருந்தார். (8-30)

## வவுனியாவில் 24 ஆயிரம் ஏக்கர் காணி விடுவிக்கப்படும் - பிரதி அமைச்சர்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி காணி உரித்து தொடர்பான பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டு வருவோம் என விவசாய காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர் சுனில் ரணசிங்க தெரிவித்தார்.

வவுனியாவில் விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகளை சந்தித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கில் காணி பிரச்சினைகள் நிறையவே இருக்கின்றது. ஒரு புறத்தில் மக்களுடைய காணிக்கான உரித்து இழக்கப்பட்டிருக்கிறது. மறுபுறம் காணிகளை பயன்படுத்த முடியாத நிலைமையில் காணப்படுகின்றனர்.

இராணுவத்தினராலும், பாதுகாப்பு தரப்பாலும், வனவளத் திணைக்களத்தாலும் கையகப்படுத்தப்பட்ட காணிகளும் காணப்படுகிறது.

இவ்வாறான விடயங்கள் தொடர்பாக எதிர்காலத்தில் கலந்துரையாடி அந்த காணிகளை மக்களுக்கு மீள வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வோம்.

வவுனியா மாவட்டத்தில் வனவளத் திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்ட காணிகள் தொடர்பாக கலந்துரையாடி விவசாய காணிகளில் பெரும் பகுதியானவற்றை விடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளோம்.

ஏற்கனவே அவை வனவளத் திணைக்களத்திற் குரித்தானதாக அடையாளப்படுத்தப்பட்டிருந்தாலும் விவசாயிகளுக்காக அதனை மீள வழங்குவதற்கு வனவள திணைக்களம் இணக்கம் தெரிவித்திருக்கின்றது.

வவுனியா மாவட்டத்தில் 24 ஆயிரம் ஏக்கர் காணிகள் மீள பொதுமக்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதுவரை காலமும் எம்மிடம் விவசாயம், கால்நடை, காணி விடயங்களை உள்ளடக்கி ஒன்றிணைந்த வேலைத் திட்டம் இருக்கவில்லை. தற்போது அது உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே வரும் காலங்களில் ஒன்றிணைந்த வேலைத்திட்டமாக இதனை கொண்டு செல்வதற்கான வாய்ப்பு காணப்படுகிறது.

வவுனியாவில் 40 வீத மானவர்கள் வறுமைக் குட்பட்ட மக்கள் வாழ்கின்றார்கள். அவர்களுடைய பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டுமாக இருந்தால் உற்பத்தி பொருளாதாரம் மேம்பட வேண்டும். நாங்கள் இவ்வாறான வேலைத்திட்டத்தை முன்



னெடுப்பது வறுமையை இல்லாது ஒழிப்பதற்காகவே. வவுனியா மாவட்டத்திற்காக முன்னெடுக்கப்படும் திட்ட முன்மொழிவுகளின் பிரகாரம் தான் எதிர்வரும் மூன்று ஆண்டுகளுக்கான வரவு செலவுத் திட்டத்தில் வவுனியா மாவட்டத்திற்கான நிதி ஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப்படும்.

வட மாகாணத்தில் உள்ள காணி உரித்து தொடர்பாக நாங்கள் ஒரு விசேட வர்த்தமானி ஒன்றினை வெளியிட்டு இருந்தோம். ஆனால் அந்த வர்த்தமானி தற்போது கைவிடப்பட்டிருக்கிறது.

எனினும் நாங்கள் அரச உத்தியோகத்தர்கள் ஊடாக வவுனியா மாவட்டத்தில் பொதுமக்கள் மத்தியில் இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி காணி உரித்து தொடர்பான பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டு வருவதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுப்போம் எனத் தெரிவித்தார். (8-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## அமெரிக்க டொலர் மதிப்பு 50 ஆண்டுகள் காணாத வீழ்ச்சி



(வோஷிங்டன்)
அமெரிக்க டொலர் மதிப்பு, கடந்த அரை நூற்றாண்டு காலத்துக்குப் பின் அதிக பலவீனம் அடைந்துள்ளது.

சர்வதேச நாடுகள், முக்கிய வர்த்தக கூட்டாளி நாடுகளின் கரன்சிக்கு எதிரான டொலர் மதிப்பு கடந்த ஆறு மாதங்களில், 10 சதவீதத்துக்கு மேல் வீழ்ச்சி கண்டிருக்கிறது. இந்த அளவு வீழ்ச்சியை, 1973ஆம் ஆண்டில் தான் அது கண்டது.

தங்கத்தின் மதிப்புடன் இணைக்கப்பட்டிருந்த அமெரிக்க டொலரை, அதிலிருந்து 1973இல் அமெரிக்க அரசு விலக்கிக் கொண்டது. அப்போது டொலர் மதிப்பு பெரும் வீழ்ச்சி கண்டது.

அதுபோன்றதொரு பெரிய சம்பவமாக, மீண்டும் அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்றது கருதப்படுகிறது.

அவர் பொறுப்பேற்றது முதல், நிலையற்ற வரி விதிப்புகள், வரி மாற்றங்கள், அதிக உற்பத்தி கொண்ட நாடுகளுடன் பிணக்குகள் என அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள், டொலர் மதிப்பில் நிலையற்ற தன்மைக்கு வித்திட்டதாக பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

ட்ரம்பின் வர்த்தக திட்டங்கள், பணவீக்க கவலைகள், அதிகரிக்கும் அரசின் கடன் ஆகியவை அமெரிக்க டொலரின் மதிப்பில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன.

கடும் வரிவிதிப்பு மற்றும் கட்டுப்பாடுகளால், அமெரிக்காவில் வெளிநாட்டினரின் முதலீடுகள் குறைந்து வருகின்றன.

இதனால், அரசு முன் எப்போதும் இல்லாத வகையில், அதிக கடன் வாங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

வரி விதிப்புகளிலும் உறுதியாக இல்லாத ஜனாதிபதி ட்ரம்ப், அடிக்கடி தன் அறிவிப்புகளை நிறுத்தி வைப்பதும் தினசரி மாற்றி அறிவிப்பதும், முதலீட்டாளர்கள், கரன்சி வணிகர்கள் இடையே குழப்பத்தை ஏற்படுத்துவதால், டொலர் மதிப்பு தள்ளாடுகிறது.

ட்ரம்ப் ஜனாதிபதியாக பதவியேற்றதும், டொலர் மதிப்பு வேகமாக உயர்ந்தது. அப்போது இந்தியா உள்ளிட்ட பல நாடுகளின் கரன்சி மதிப்பு அதிக வீழ்ச்சி கண்டதால், அந்நாடுகள் கவலை கொண்டன. ஆனால், சில மாதங்களில் நிலைமை மாறியது.

வர்த்தகத்துக்கு ஆதரவான நிர்வாகம் என்ற நம்பிக்கையை, ட்ரம்ப் அரசு மீது உள்நாட்டு முதலீட்டாளர்கள் இழந்ததே இதற்கு காரணம்.

பங்குச் சந்தைகள் வீழ்ச்சி, கடன் வட்டி உயர்வு, அதிக பணவீக்கம் ஆகியவற்றால் தளர்ந்திருந்த முதலீட்டாளர்களை, ட்ரம்ப் விதித்த கடுமையான வரிகள் தடுமாற வைத்தன.

பொருளாதார நிபுணர்கள், முதலீட்டாளர்கள், ஆய்வாளர்கள் என எந்த பிரிவினரும் கணிக்க முடியாத அளவில் வரி விதிப்பு இருந்ததால், அமெரிக்க சந்தைகளில் பங்குகள், பத்திரங்கள் முதல் டொலர் வணிகம் வரை பீதி தொற்றிக் கொண்டது.

அப்போது தொடங்கிய டொலர் மதிப்பு தள்ளாட்டம், தற்போது 1973ஆம் ஆண்டில், அதாவது அரை நூற்றாண்டுக்கு முன் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு நிகரான சூழலை ஏற்படுத்திவிட்டது.

# 60 நாட்கள்

# நிபந்தனைகளுக்கு

## ஹமாஸிற்கும் அழை

**(வோஷிங்டன்) நிபந்தனைகளின் அடிப்படையில் காசாவில் 60 நாட்கள் போர் நிறுத்தத்திற்கு இஸ்ரேல் ஒப்புக்கொண்டதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார். மேலும், நிலைமைகள் மோசமடைவதற்கு முன்பு இந்த ஒப்பந்தத்தை ஹமாஸ் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார்.**

அடுத்த வாரம் வெள்ளை மாளிகையில் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை சந்திக்க தயாராகி வரும் நிலையில நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை ட்ரம்ப் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

இந்த அறிவிப்பு பல ஆண்டுகளாக இப்பகுதியை பேரழிவிற்கு உட்படுத்திய மோதலில் ஒரு திருப்புமுனையாகும்.

டொனால்ட் ட்ரம்ப் வெள்ளை மாளிகைக்கு மீண்டும் திரும்புவதற்கு ஒருநாள் முன்பு, ஜனவரி 19 அன்று தொடங்கிய முந்தைய போர் நிறுத்தம் மார்ச் வரை நீடித்தது.

ஹமாஸ் ஒப்பந்தத்தின்

## சுனாமி அலைகள் போல் தோன்றிய

# திகைப்படைந்த போர்த்துக்கல்

(போர்த்துக்கல்)
போர்த்துக்கல் தற்போது மேற்கு ஐரோப்பாவின் பெரும் பகுதியை பாதித்த வெப்ப அலையை எதிர் கொள்கிறது.

போர்த்துக்கலின் வெப்பம் பல்வேறு அசாதாரண வானிலை நிகழ்வுகளை ஏற்படுத்தியது.

அவற்றில் திடீர் மழை, இடியுடன் கூடிய மழை மற்றும் ஆலங்கட்டி மழை ஆகியவை அடங்கும்.

இதுபோன்ற ஒரு சம்பவம் போர்த்துக்கலின் கடற்கரைக்குச் செல்வோரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

ஜூன் 29 அன்று கடலுக்கு மேல் எழுந்த மிகப்பெரிய சுனாமி அலைகள் போல் தோன்றிய ரோல் மேகங்களால் அவர்கள் திகைத்துப் போனார்கள்.


வெவ்வேறு வெப்ப நிலைகளின் காற்று நிறைகள் ஒன்றோடொன்று கலக்கும் போது மேகங்கள் உருவாகின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# போர் நிறுத்த இஸ்ரேல் ஒப்புதல்!

## ...ழைப்பு விடுத்தார் ட்ரம்ப்




விதிமுறைகளை மீறுவதாகக் குற்றம் சாட்டி, இஸ்ரேல் தனது தாக்குதலை மீண்டும் தொடங்கியபோது விரோதப் போக்கு மீண்டும் தொடங்கியது.

அப்போதிலிருந்து, பாலஸ்தீனியர்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவது பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# வெளிநாட்டு மாணவர்களுக்கு புதிய கட்டுப்பாடுகள்

## விதிக்கும் அமெரிக்கா



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் படிக்கும் வெளிநாட்டு மாணவர்களுக்கு அமெரிக்க அரசு பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து வருகிற நிலையில் சமீபத்தில் சில வெளிநாட்டு மாணவர்களின் விசா இரத்து செய்யப்பட்டது.

இந்த நிலையில் வெளிநாட்டு மாணவர்களுக்கு புதிய கட்டுப்பாட்டை விதிக்க அமெரிக்க அரசு முடிவு செய்துள்ளது.

அதன்படி வெளிநாட்டு மாணவர்களின் விசாவை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் தகுதி வாய்ந்ததாக மாற்றும் விதியை உள்நாட்டுப் பாதுகாப்புத்துறை முன்மொழிந்துள்ளது.

தற்போது சர்வதேச மாணவர்கள் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களில் தங்கள் முழுநேர மாணவர் அந்தஸ்தை கடைப்பிடித்தால் அவர்கள் கல்வி முடியும் வரை அமெரிக்காவில் தங்கலாம் எனவும் இதை முன்னரே தீர்மானிக்கப்பட்ட தங்கும் காலத்திற்கு மாற்ற ட்ரம்ப் நிர்வாகம் முடிவு செய்துள்ளதுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் விசாவில் ஒரு நிலையான காலாவதி திகதியுடன் சர்வதேச மாணவர்கள் அடிக்கடி விசா நீடிப்புகளுக்கு விண்ணப்பிக்க வேண்டியிருக்கும்.

இது கூடுதல் தேவையற்ற தாமதங்கள், நிதிச் சுமை மற்றும் மாணவர்களுக்கு நிச்சயமற்ற தன்மையை உருவாக்கும் என்று நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். (நி)



# ...ய மேகங்கள்! ...கல் மக்கள்!

றன.

ரோல் மேகத்தின் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை மக்கள் பகிர்ந்து கொண்டனர்.

மேகம் அடி வானத்தில் எழுந்ததால் கடற்கரையில் சிறிது நேரம் இருள் சூழ்ந்ததாகக் காணப்பட்டது.

150 கி.மீ நீளம் கொண்டதாக காணப்பட்ட ரோல் மேகங்கள், ஃபிகுவேரா டா ஃபோஸிலிருந்து விலா டோ கோண்டே வரை நீண்டு காணப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இதனை பார்த்த மக்கள், தாங்கள் பார்ப்பது மேகமா அல்லது சுனாமி அலைகளா என்று திகைத்துப் போனார்கள்.

இதனிடையே, கடுமையான வெப்பநிலை போர்த்துக்கலில் காட்டுத் தீயையும் ஏற்படுத்தியுள்ளது. (நி)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புதிய விலைகளில் நெல் கொள்வனவு

## இன்று முதல் ஆரம்பம்

(கொழும்பு)

நெல்லை கொள்வனவு செய்ய நெல் சந்தைப்படுத்தல் சபை தயாராகவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, இன்று முதல் புதிய விலைகளில் நெல் சந்தைப்படுத்தல் சபை நெல்லை கொள்வனவு செய்யும் என விவசாய பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

1 கிலோகிராம் நாடு நெல் வகை - ரூபாய் 120, 1 கிலோகிராம் சம்பா - ரூபாய் 125, 1 கிலோகிராம் கீரி சம்பா - ரூபாய் 132 ஆகிய புதிய விலைகளில் நெல் கொள்வனவு செய்யப்படும் என அவர் தெரிவித்தார். (நி)

# இலங்கை வருகிறார் ஷாருக்கான்



(கொழும்பு)

பொலிவுட்டின் சூப்பர் ஸ்டார் ஷாருக்கான், எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி இலங்கை வருகை தரவுள்ளார்.

"City of Dreams Sri Lanka" திறப்பு நிகழ்வுக்கு விசேட விருந்தினராக ஷாருக்கான் கொழும்புக்கு வருகை தரவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1992- இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி-பா-35<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L, Business<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: B/15753 | பிறப்பு-1993-இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BSC,Engineer (Newzealand)<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/15775 |
| பிறப்பு:1992-இந்து<br>நட்சத்திரம்:பரணி<br>கி-பா-59 1/4<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்-A/L.லண்டன்<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15756 | பிறப்பு-1997-இந்து<br>நட்சத்திரம்- உத்தரட்டாதி<br>கி-பா-9 3/4<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: Pharmacist,Demo<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/15776 |
| பிறப்பு:1995-இந்து<br>நட்சத்திரம்:மகம்<br>கி-பா-44<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:BSc,Engineer(pvt)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/15757 | பிறப்பு-1997-இந்து<br>நட்சத்திரம்- அனுசம்<br>கி.பா -10<br>உயரம்-5'3"<br>தகைமை/தொழில்: Bsc,MLT(PVT)<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: G/15779 |
| பிறப்பு: 1987- இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி-பா-37 3/4<br>7இல் செவ்<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்-Diploma,பிரான்ஸ்<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15761 | பிறப்பு-1996-இந்து<br>நட்சத்திரம்:மூலம்<br>5இல்சூரிசெவ்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில் -O/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு(சுவிஸ்)<br>தொ.இ: G/15784 |
| பிறப்பு: 2000- இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>12இல் செவ்<br>உயரம்:6'1"<br>தகைமை/தொழில்: BBA,UK<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15763 | பிறப்பு-2000-இந்து<br>நட்சத்திரம்:அனுசம்<br>கி.பா -44<br>6இல்சூரிசெவ்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில் -A/L<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்.<br>தொ.இ: G/15786 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 407

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## இதமும் பிரியமும்!

"இதோ இருக்கிறாரே. இவர் மிகவும் இதமாகப் பேசக்கூடியவர்!" என்று ஒருவரை அறிமுகப் படுத்தினார் ஒரு நண்பர்.

"இதோ இருக்காரே இவர் மிகவும் பிரியமாகப் பேசக்கூடியவர்!" என்று அவரே இன்னொருத்தரை அறிமுகப்படுத்தினார்.

இவர்கள் இரண்டு பேருக்கும் என்ன வித்தியாசம்?

இதமாக பேசுவதற்கும் பிரியமாக பேசுவதற்கும் வித்தியாசம் உண்டா? என்று பெரியவங்களிடம் கேட்டால் உண்டு என்று சொல்கிறார்கள்.

பிரியமாக பேசுபவர்கள் பலபேர் இருப்பார்கள். ஆனால் இதமாகச் சொல்பவர்கள் சிலபேர்தான் இருப்பார்கள்!

இப்ப உங்களிடம் நான் பேசுகிறேன் என்று வையுங்கள்.

"உங்களுக்கு கேட்பதற்கு எது இன்பமாக இருக்குமோ" அதைச் சொல்வது பிரியம்! அதாவது உங்களுக்கு எதைச்சொன்னால்பிடிக்குமோ அதைச்சொல்வது பிரியம்!

உங்களுக்கு எதைச்சொன்னால்நன்மையோ அதைச்சொல்வது இதம்!

நாம் இதமாக பேசினாலும் பிரியமாக பேசினாலும் அதனாலே ஆகப் போவது பெரிதாக ஒன்றும் இல்லை.

ஆனால்ஒரு பெரிய பொறுப்பிலே உள்ளவர்கள். அதாவது ராஜா என்று வையுங்கள். ஒரு ராஜாவுக்கு ஆலோசனை சொல்லக்கூடிய அமைச்சர்கள் அல்லது அதிகாரிகள் எப்படி இருக்க வேண்டும் தெரியுமா?

இதமாக சொல்பவர்களாக இருக்க வேண்டும் பிரியமாக மட்டும் பேசுபவர்களாக இருந்துவிடக்கூடாது!

ஒரு அரசனிடம் பேசும் போது அவனுக்கு எது நன்மையோ அதைச் சொல்ல வேண்டும்.

ஆனால் எல்லாரும் என்ன செய்வார்கள் தெரியுமா?

ஒரு அரசனிடம் என்ன பேசினால். அவனுக்குப் பிடிக்குமோ அதைப் பேசுபவர்கள்தான் அதிகம்.

ஏன் அப்படிப் பேசுகிறீர்கள்? என்று கேட்டால்! "அப்படிப் பேசினால் தான் அவர் எங்கள் சம்பளத்தை உயர்த்துவார்!" என்று சொல்லுவார்கள்.

"இதம்" என்பது பலசமயங்களிலே கசப்பாத்தான் இருக்கும். அதனாலே அதைச் சொல்பவர்களை யாருக்கும் பிடிக்காது. அதனாலே தான் விபீஷணனை ராவணனுக்குப் பிடிக்காமல் போனது!

அன்றைக்கு என்ன நடந்தது.

ராவணன் தன்னுடைய அமைச்சர்களையெல்லாம் கூப்பிட்டான். யோசனை கேட்டான்.

"வெற்றிக்கு" மூல காரணம். அமைச்சர்களின் நல்ல ஆலோசனை என்று பெரியவர்கள் சொல்லுவார்கள். அதனாலே எனக்கு நல்ல ஆலோசனை சொல்லுங்கள்! எனறு கேட்கிறான்.

ஆனால் அவர்கள் நல்ல ஆலோசனை சொல்லவில்லை. ராவணனுக்கு எதைச்சொன்னால்பிடிக்குமோ அதைச்சொன்னார்கள்.

"சீதையை நீயே வைத்துக்கொள். ராமனை நாங்கள் கொன்றுவிடுகிறோம்!" என்றார்கள். ஆனால் விபீஷணன் என்ன சொன்னான் தெரியுமா?

"தனியாக நின்று ராமனை நாம் ஜெயிக்க முடியுமா?

அதனாலே சீதையைத் திருப்பிக்கொடுத்துவிட்டு அவனிடம் மன்னிப்பு கேள்! " என்றான். இந்த இதம் ராவணனுக்குக் கசப்பாக இருந்தது.

விபீஷணன் சொன்ன வார்த்தைகள் ராவணனிடம் எடுபடவில்லை.

"புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருள் எனப் போய் விட்டது!"

இந்தக் காதாலே வாங்கி அந்தக் காதாலே விட்டுட்டான். அதனாலே அழிந்தான்.

நம்மிடம் யாராவது வந்து ஒரு யோசனை சொன்னால்கூட அந்த யோசனைக்குப் பின்னால் இருக்கிறது பிரியமா? இதமா? என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

நல்ல யோசனை, நமக்குப் பிடிக்கவில்லை என்றால் கூட, அதை நாம் அலட்சியப்படுத்தக்கூடாது!

ஒரு ராஜா இருந்தார். அவரிடம் பிரியமாவும் இதமாகவும் பேசக்கூடிய அமைச்சர் ஒருவரும் இருந்தார்.

ஒருநாள் இரவு எதிரி நாட்டு அரசன் வந்து இங்கே இருந்த ராணியைத் தூக்கிக்கொண்டு போய் விட்டான். அதாவது சிறை எடுத்துக் கொண்டு போய் விட்டான். இந்த விடயம் தெரிந்ததும் அமைச்சர் ஓடி வந்தார் ராஜாவிடம் சொல்வதற்கு.

"அரசே! அந்நிய நாட்டு மன்னன் இங்கே வந்து அரசியை தூக்கிக்கொண்டு போய் விட்டான். இப்போது என்ன செய்யலாம்?" என்று உத்தரவு கேட்டார்.

"உடனே அந்த பகை மன்னன் எங்கேயிருந்தாலும் கண்டுபிடித்து கொண்டாருங்கள்!" என்றார் ராஜா.

"ஏன்?" என்று கேட்டார் அமைச்சர்.

"அவனுக்குப் பாராட்டு விழா நடத்தி பத்தாயிரம் பொற்காசுகள் பரிசு கொடுத்து அனுப்ப வேண்டும்!" என்றார் ராஜா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி மாத இராசி பலன்கள்-2025

## குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்



**கிரகநிலை** - தொழில் ஸ்தானத்தில் சுக்கிரன் - லாப ஸ்தானத்தில் சூரியன், குரு - அயன சயன போக ஸ்தானத்தில் புதன் - இராசியில் செவ்வாய், கேது - களத்திர ஸ்தானத்தில் சனி, ராகு என கிரகங்கள் வலம் வருகிறார்கள்.

**கிரகமாற்றம்:** 02.07.2025 அன்று களத்திர ஸ்தானத்தில் சனி வக்ரம் ஆரம்பிக்கிறார்; 03.07.2025 அன்று அயன சயன போக ஸ்தானத்தில் புதன் வக்ரம் ஆரம்பிக்கிறார் ; 17.07.2025 அன்று லாப ஸ்தானத்தில் இருந்து சூரியன் அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார் : 17.07.2025 அன்று புதன் பகவான் அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து லாப ஸ்தானத்திற்கு மாறுகிறார் ; 26.07.2025 அன்று தொழில் ஸ்தானத்தில் இருந்து சுக்கிரன் லாப ஸ்தானத்திற்கு மாறுகிறார் ; 29.07.2025 அன்று இராசியில் இருந்து செவ்வாய் தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** இந்த மாதம் இராசிநாதன் சூரியன் அயன சயன போக விரைய ஸ்தானத்திற்கு மாத மத்தியில் வருகிறார். தொழில் நிமித்தமாக இடம் விட்டு இடம் பெயரும் சூழ்நிலை உருவாகும். உங்களின் தரத்தை விட தீயோரோடு சகவாசத்தை குறைக்க வேண்டும். எனினும் லாப ஸ்தானத்தில் இருக்கும் குரு சஞ்சாரத்தால் தெய்வ அனுகூலத்தால் விடுபட்டு முன்னேற்றம் வந்து சேரும்.

உறவினர்கள் வகையில் வீண் மனக் கசப்பு வரலாம். வெளியூர் பயணம் ஏற்படும். அதீத உழைப்பின் மூலமே அனைத்து நற்பலன்களையும் பெற முடியும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். தேவைகள் பூர்த்தியாகும். உத்தியோகம் பார்ப்பவர்கள் முன்னேற்றம் காண்பர். பதவி உயர்வு, சம்பள உயர்வு போன்றவை தங்கு தடையின்றி கிடைக்கும். உடன் பணிபுரிபவர்கள் ஆதரவுடன் இருப்பர்.

புதிய வியாபாரம் தொடங்குவதற்கு முன் ஒன்றுக்கு மேற்பட்டவர்களிடம் ஆலோசனை செய்யவும். அறிவைப் பயன்படுத்தி ஏற்றம் :காணலாம். கலைஞர்கள், புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கப் பெறுவர். புகழ் பாராட்டு கிடைக்கும். மாணவர்கள் தொடர்ந்து சிறப்பான நிலையில் இருப்பர். நல்ல மதிப்பெண்கள் கிடைக்கும். பலருக்கு வெற்றி நிச்சயம்.

பொதுநல சேவகர்கள் நல்ல முன்னேற்றம் காண்பர். அரசியல்வாதிகள் எதிர்பார்த்த பதவியை அடையலாம்.




பெண்கள் அலைச்சல் இருக்கும். பெண்கள் உற்சாகமாக காணப்படுவர். கணவர் மற்றும் அண்டை அயலாரின் அன்பும் பாசமும் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவார்கள்.

**மகம்:** இந்த மாதம் நன்மை தீமை பற்றி கவலைப்படாமல் உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணியை திறம்பட செய்வீர்கள். போட்டிகள் மறையும். திருமணம் தொடர்பான காரியங்கள் சாதகமாக பலன் தரும். குடும்பத்தில் இருந்த மறைமுக எதிர்ப்புகள் மறையும். உங்களது வார்த்தைக்கு மதிப்பு கூடும். கணவன், மனைவிக்கிடையே இருந்த மனக் கசப்பு நீங்கும். பிள்ளைகள் உங்களது பேச்சுக்கு செவி சாய்ப்பார்கள்.

**பூரம்:** இந்த மாதம் கடன் தொடர்பான பிரச்சனைகள் தீரும். பணவரத்து கூடும். மன குழப்பம் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். திறமையாக செயற்பட்டு பாராட்டு பெறுவீர்கள். சின்ன விடயத்துக்குக் கூட கோபம் வரலாம் நிதானமாக இருப்பது நன்மை தரும். வேற்று மொழி பேசும் நபரால் நன்மை உண்டாகும்.

**உத்திரம் 1 ஆம் பாதம்:** இந்த மாதம் புத்தி சாதுரியத்தால் எதையும் சமாளிப்பீர்கள். வீண் அலைச்சல் ஏற்படும். நீங்கள் நினைப்பதுபடி மற்றவர்கள் நடந்து கொள்ளாததால் டென்ஷன் ஏற்படலாம். தொழில், வியாபாரம் தொடர்பான பயணங்கள் அதனால் அலைச்சல் ஏற்படலாம். வியாபார விரிவாக்கம் தொடர்பான பணிகளில் இடையூறுகள் ஏற்படலாம். பழைய பாக்கிகள் வசூலில் தாமதமான நிலை காணப்படும்.

**பரிகாரம்:** ஞாயிற்றுக்கிழமை அன்று அருகிலிருக்கும் ஏதேனும் ஒரு சிவன் கோவிலுக்குச் சென்று 3 முறை வலம் வருவது நல்லது.

**சந்திராஷ்டம தினங்கள்:** 16, 17

**அதிர்ஷ்ட தினங்கள்:** 04, 05, 06

## காரியத்தடைகள் நீங்கி அனுகூலம் பிறக்கும்



**கிரகநிலை** - பாக்கிய ஸ்தானத்தில் சுக்கிரன் - தொழில் ஸ்தானத்தில் சூரியன், குரு - லாப ஸ்தானத்தில் புதன் - அயன சயன போக ஸ்தானத்தில் செவ்வாய், கேது - ரண ருண ரோக ஸ்தானத்தில் சனி, ராகு என கிரகங்கள் வலம் வருகிறார்கள்.

**கிரகமாற்றம்:** 02.07.2025 அன்று ரண ருண ரோக ஸ்தானத்தில் சனி வக்ரம் ஆரம்பிக்கிறார் ; 03.07.2025 அன்று லாப ஸ்தானத்தில் புதன் வக்ரம் ஆரம்பிக்கிறார் ; 17.07.2025 அன்று தொழில் ஸ்தானத்தில் இருந்து சூரியன் லாப ஸ்தானத்திற்கு மாறுகிறார் ; 17.07.2025 அன்று புதன் பகவான் லாப ஸ்தானத்தில் இருந்து தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார் ; 26.07.2025 அன்று பாக்கிய ஸ்தானத்தில் இருந்து சுக்கிரன் தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார் ; 29.07.2025 அன்று அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து செவ்வாய் இராசிக்கு மாறுகிறார்

**பலன்கள்:** இந்த மாதம் இராசிநாதனுடைய சஞ்சாரம் லாபம் மற்றும் தொழில் ஸ்தானத்தில் அமைந்திருக்கிறது. எந்த பிரச்சனையையும் சந்தித்து முறியடிக்கும் வல்லமையைப் பெறலாம். காரியத்தடைகள் நீங்கி அனுகூலம் பிறக்கும். மதிப்பு மரியாதை சுமாராகவே இருக்கும். வீண் வாதங்களைத் தவிர்க்கவும். குடும்பத்தின் தேவைகள் பூர்த்தியாகும். புதிய வீடு வாங்க வாய்ப்பு உண்டு.

குழந்தை பாக்கியம் கிடைக்கும். கணவன் மனைவி இடையே அன்பு நீடிக்கும் என்றாலும் சிற்சில பிரச்சனைகள் வரத்தான் செய்யும். எனவே ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துப் போகவும். தொழில் நிமித்தமாக குடும்பத்தை விட்டு பிரிய நேரிடலாம். தூரத்தில் இருக்கும் உறவினரால் நன்மை ஏற்படும். சொந்தத் தொழில் புரிவோர் சிறிது சிரத்தை எடுத்து உழைக்க வேண்டியிருக்கும்.

ஆனாலும் உழைப்புக்கேற்ற லாபம் கிடைக்கும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு வேலைப் பளு அதிகரிக்கும். ஆனாலும் வருமானத்தில் எந்த குறையும் இருக்காது. உடன் பணிபுரிவோரிடம் அனுசரணையாக நடந்து கொள்ளவும். கலைத்துறையினருக்கு முயற்சிகளின் பேரில் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். ஆனால் பொருளாதார ரீதியாக சிறப்பாக இருக்கும்.

அரசியல்வாதிகளுக்கு பண விடயம் திருப்திகரமாக இருக்கும். ஆனால் எதிர்பார்த்த பதவி கிடைப்பதில் வாக்கு




வாதம் ஏற்படலாம். பெண்கள் குடும்ப ஒற்றுமைக்காக விட்டுக் கொடுத்து போக வேண்டியிருக்கும். மாணவர்கள் படிப்பில் தீவிர அக்கறை எடுக்க வேண்டும்.

**உத்திரம் 2, 3, 4 பாதங்கள்:** இந்த மாதம் குடும்பத்தில் இருந்த இறுக்கமான சூழ்நிலை நீங்கும். குடும்ப உறுப்பினர்கள் மூலம் வருமானம் வரும். சொன்ன சொல்லை எப்பாடு பட்டாவது காப்பாற்றுவீர்கள். ஒரு சில பணி காரணமாக வீட்டை விட்டு வெளியில் தங்க நேரிடலாம். கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். வீட்டிற்கு தேவையான பொருட்கள் வாங்குவது மூலமும் விருந்தினர் வருகையாலும் செலவு உண்டாகும்.

**அஸ்தம்:** இந்த மாதம் திடீர் கோபங்கள் உண்டாகலாம். நிதானமாக இருப்பது நல்லது. புத்திசாதுரியத்தால் எதையும் சமாளிப்பீர்கள். எந்த ஒரு விடயத்தையும் தள்ளிப் போடாமல் உடனே முடிவு காண்பது நல்லது. தெளிவான சிந்தனை தோன்றும். எந்த காரியத்தையும் செய்யும் முன் ஆலோசனை செய்து அதில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள்.

**சித்திரை 1, 2, பாதங்கள்:** இந்த மாதம் சாமர்த்தியமான உங்களது செயல் கண்டு மற்றவர்கள் ஆச்சரியப் படுவார்கள். முக்கிய நபர்கள், அந்தஸ்தில் உயர்ந்தவர்கள் நட்பு கிடைக்கும். அதனால் கௌரவம் அதிகரிக்கும். புதிய தொடர்புகள் மகிழ்ச்சி தரும். தொழில், வியாபாரம் தொடர்பாக புதிய நபர்களின் அறிமுகம் உண்டாகும். அதனால் நன்மை உண்டாகும்.

**பரிகாரம்:** புதன்கிழமை அன்று அருகிலிருக்கும் ஐயப்பன் கோவிலுக்குச் சென்று வணங்கி வருவது நன்மை தரும்.

**சந்திராஷ்டம தினங்கள்:** 18, 19.

**அதிர்ஷ்ட தினங்கள்:** 07, 08 ;

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 811





இடும்பன்காரி 'இங்கே ஒருவரும் வரவில்லையே, அம்மா!' என்று ஒரே சாதிப்பாகச் சாதித்தான். அவன் வார்த்தையை என்னால் நம்ப முடியவில்லை. என் தோழி சந்திரமதியோ என்னைப் பரிகாசம் பண்ண ஆரம்பித்து விட்டாள். 'அக்கா! இன்றைக்கு உங்களுக்கு ஏதோ சித்தப்பிரமை தான் பிடித்திருக்கிறது! ஆள் இல்லாத இடங்களிலெல்லாம் ஆள் இருப்பதாகத் தோன்றுகிறது!' என்றாள்.

பிறகு நீங்கள் எல்லாரும் கோட்டை வாசலை நெருங்கி வந்து கொண்டிருப்பதாகத் தெரிவித்தாள். தங்களை வரவேற்பதற்காக என்னை என் தந்தை உடனே அழைத்து வரச் சொன்னதாகவும் கூறினாள். உடனே நான் அரண்மனை வாசலுக்குப் புறப்பட்டேன். சீக்கிரம் அங்கே வந்து விடுவதற்காகச் சந்திரமதி வந்த நடையில் சென்று இரண்டு கட்டுக்களைத் தாண்டி மச்சுப்படி வழியாக ஏறி மேல் மாடத்தில் நடந்து போனேன்.

அப்போது மறுபடியும் ஓர் அதிசயத்தைப் பார்க்க நேர்ந்தது. அந்த வாணர் குலத்து வீரர் நிலா முற்றத்தைக் கடந்து மதில் சுவர் ஓரமாகப் போய்க் கொண்டிருந்தார். சுவரில் ஒரு மூங்கில் கழியை வைத்து ஏறி மதில் சுவரைத் தாண்டிக் குதிப்பதையும் பார்த்தேன். என் கண்களுக்கு அவ்வாறு தோன்றியது. அவையெல்லாம் உண்மையாக நடந்தவையா அல்லது என் சித்தப்பிரமையா என்று இன்னமும் எனக்கு நிச்சயமாகவில்லை"

நந்தினி சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். அந்த மாளிகை வாசலுக்குச் சற்றுத் தூரத்தில் அடர்ந்த மரங்களினிடையே நேற்று மாலை அவள் பார்த்த இரு முகங்கள் அவள் மனக்கண் முன் தோன்றின. அவர்களைப் பிடிப்பதற்குக் குதிரை ஆட்கள் ஏவப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் அவள் அறிந்திருந்தாள். அவர்கள் ஒருவேளை இதற்குள் பிடிபட்டிருப்பார்களா? பிடிபட்டிருந்தால் இங்கே கொண்டு வரப்படுவார்களா?

"அக்கா! உங்களுக்கு என்ன தோன்றுகிறது?" என்று கேட்டு, நந்தினியின் சிந்தனையைத் தடை செய்தாள் மணிமேகலை.

"எனக்கா! எனக்குத் தோன்றுகிறதையா கேட்கிறாய்? உனக்கு மோகப்பித்தம் நன்றாகத் தலைக்கு ஏறியிருக்கிறது என்று தோன்றுகிறது" என்றாள் நந்தினி.

"சந்திரமதியைப் போல் நீங்களும் பரிகாசம் செய்கிறீர்களா?"

"நான் பரிகாசம் செய்யவில்லையடி! நேரில் பார்த்துப் பேசிய உனக்கே உண்மையா, கனவா, சித்தப்பிரமையா என்று தெரியவில்லையே! நான் எப்படிச் சொல்ல முடியும்? இந்த அறையிலிருந்து வெளியேறிப் போவதற்கு வேறு ஏதேனும் இரகசிய வழி இருக்கிறதா?"

"எனக்குத் தெரிந்த வரையில் வேறு இரகசிய வழி இல்லை, அக்கா!"

"நீயும் சந்திரமதியும் போன வழியில் அவனும் போய் மச்சுப்படி ஏறிப் போயிருக்கலாம் அல்லவா?"

"அங்கே வழியில் பல பணிப்பெண்கள் இருந்தார்கள் அக்கா! அவர்களுக்குத் தெரியாமல் போயிருக்க முடியாது."


"அதிசயமாகத்தானிருக்கிறது இதையெல்லாம் பற்றி உன் தகப்பனாரிடம் நீ தெரிவிக்கவில்லையா?" "தெரிவிக்கவில்லை அக்கா! தகப்பனாரிடம் சொல்லக் கூச்சமாகவும் இருக்கிறது. பயமாகவும் இருக்கிறது.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## எதுவும் ஒரு தொழில்தான்



இரத்தினபுரி என்னும் சிற்றூருக்கு மாதவன் என்னும் இளைஞன் வேலை தேடி வந்தான். அந்த ஊரில் எல்லா இடங்களிலும் வேலை தேடி அலுத்து போனான்.

எங்கும் வேலை கிடைக்கவில்லை. காரணம் இவன் வெளியூர்க்காரன் இவனை நம்பி எப்படி வேலை கொடுப்பது என்று நிறைய பேர் வேலை தர மறுத்து விட்டனர். மாதவன் பாவம் சோர்ந்து போய் விட்டான். அவனுக்கு அவன் அம்மாவிடம் சொல்லி வந்தது ஞாபகம் வந்தது.

அவன் அம்மா சுமார் ஐம்பது மைல் தள்ளி வசித்து வந்தார். கூலி வேலையாளாக அங்குள்ள விவசாயத் தொழிலுக்கு சென்று கொண்டிருந்தார். மாதவனின் அப்பா இரண்டு வருடங்களுக்கு முன்னர் காலமாகி விட்டார். இதனால் வீட்டில் கஷ்டமான நிலைமை வந்து விட்டது. மாதவன் அப்பொழுது அங்குள்ள பள்ளியில் படித்துக் கொண்டிருந்தான். அப்பா காலமாகிய பின் வீட்டில் நிலவிய வறுமையை கண்டு அம்மாவிடம் நான் எப்படியாவது வெளியூர் சென்று பணம் சம்பாதித்து உனக்கு அனுப்புகிறேன் என்று உறுதி சொல்லி வந்திருந்தான். ஆனால் இங்கு நிலைமையோ வேறாக இருந்தது. எங்கும் வேலை கிடைக்கவில்லை. என்ன செய்வது? பசி வேறு அவன் காதை அடைத்தது. அங்குள்ள ஒரு கோவிலில் உட்கார்ந்து அடுத்து என்ன செய்வது என்ற கவலையில் ஆழ்ந்திருந்தான். மறுபடி ஊருக்கே போய் விடலாமா? என்ற எண்ணம் அவனுக்கு வர ஆரம்பித்து விட்டது.

அப்பொழுது ஒரு பெரிய கார் வந்து நின்றது. அதிலிருந்து பெண்களும், குழந்தைகளும் இறங்கி கோயிலுக்குள் வந்தனர். வந்தவர்கள் தங்களது மிதியடிகளை எங்கு கழட்டி வைப்பது என்று திகைத்து நின்றனர். இவன் கோயில் வாசலில் உட்கார்ந்திருப்பதை கண்டவர்கள், தம்பி இந்த செருப்பை எல்லாம் பாத்துக்க!

என்று எல்லோரும் செருப்பை கழட்டி வைத்து விட்டு உள்ளே சென்றனர்.

மாதவன் திகைத்து நின்றான். அவன் அவர்களுக்கு பதில் சொல்ல நினைக்கும் முன்னரே அவர்கள் தங்கள் மிதியடிகளை அவன் முன்னால் கழட்டி வைத்து விட்டு விறுவிறுவென உள்ளே நுழைந்து விட்டதால், இனி எங்கும் செல்ல முடியாது, அவர்கள் வரும் வரை காத்திருந்து அவர்கள் மிதியடிகளை ஒப்படைத்து விட்டு செல்வதுதான் நல்லது என்று முடிவு செய்தான். பசி வேறு அவனை மயக்க நிலைக்கு கொண்டு சென்றது.

உள்ளே சென்றவர்கள் ஒரு மணி நேரம் கழித்தே வெளியே வந்தனர். வந்தவர்கள் இவன் அருகில் வந்தனர். அப்பொழுது அவன் பசி மயக்க நிலையிலேயே இருந்தான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவான, அமைதியான மனமே எதிர்பாராத சூழ்நிலைகளிலிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்ளும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சித்த வைத்தியசாலைகளை ஊர்தோறும் அமையுங்கள்

உள்ளூராட்சி சபைகள் இயங்கத் தொடங்கி விட்டன. தனித்தும் கூட்டுச்சேர்ந்தும் அமையப் பெற்ற சபைகள் மிக உச்சமாக இயங்க வேண்டும் என்பது மக்களின் வேணவா.

மிக நீண்டகாலத்துக்குப் பின்னர் உள்ளூராட்சி சபைத் தேர்தல் இடம்பெற்று மக்களால் தெரிவு செய்யப்பட்ட சபைகள் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்துள்ளன.

இவ்வாறு பதவியேற்றுள்ள சபைகளின் பலம் என்பது போதுமானதாக இல்லை. எனவே எதிர்க்கட்சிகளுக்கும் உரிய கௌர வத்தைக் கொடுத்து அவர்களையும் அணைத் துக் கொண்டு மக்கள் சேவையை ஆற்றுவதிலேயே உள்ளூராட்சி சபைகளின் வெற்றி தங்கியுள்ளது.

அதேவேளை எதிர்க்கட்சிகளும் எதிர்க்கும் கட்சிகளாக இல்லாமல், ஆரோக்கியமான செயற்றிட்டங்களுக்கு தங்களின் மனமார்ந்த ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும்.

இதைச் செய்வதன் மூலமே உள்ளூராட்சி சபைகள் வெற்றிகரமாக இயங்கி அந்தந்தப் பிரதேச மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும்.

இல்லையேல் சபைகளில் அடிக்கடி சர்ச்சைகளும் நம்பிக்கையில்லாப் பிரேரணைகளுமே மலிந்து கிடக்கும்.

ஆக, தமிழர் தாயகத்தில் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் ஏராளமாக உள்ளன. அவற்றை உரிய உள்ளூராட்சி அமைப்புகள் தீர்த்து வைக்க வேண்டும் என்ற மக்களின் பெருவிருப்போடு, அனைத்து உள்ளூராட்சி சபைகளும் தத்தம் அதிகாரத்துக்குட்பட்ட ஊர்கள் தோறும் சித்த வைத்தியசாலைகளை நிரந்தரமாக இயக்குவதற்கு நடவடிக்கை எடுப்பது அவசியமானதாகும்.

உண்மையில் இப்போது நம் மக்கள் வைத்தியசாலைகளை நாடுவது அதிகமாகவுள்ளது. அதிலும் அரச மற்றும் தனியார் மருத்துவமனைகளைப் பார்க்கும்போது வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயங்களின் தேர்த் திருவிழாவுக்குக் கூடுகின்ற மக்கள் தொகை போல வைத்தியசாலைகள் நோயாளர்களால் நிறைந்து வழிகின்றனர்.

இதற்காக ஏகப்பட்ட பணத்தைச் செலவிடுகின்ற துர்ப்பாக்கிய நிலைமையும் ஏற்படுகின்றது.

ஆகவே எமது மக்களின் ஆரோக்கியம் பற்றி நாம் சிந்திப்போமாக இருந்தால், ஊர்கள் தோறும் சித்த வைத்தியசாலைகளை அமைத்து பக்கவிளைவற்ற சித்தமருத்துவத்தின் மகத்துவம் நம் மக்களைச் சென்றடைவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

ஆம், கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக சித்தமருத்துவத்தில் பட்டம் பெற்றவர்களுக்கு நியமனம் வழங்கப்படவில்லை.

அதேநேரம் ஏலவே இயங்கிய சித்த மருத்துவமனைகளும் மூடப்பட்டு இன்னொரு சித்த வைத்தியசாலையுடன் இணைக்கப்படுகின்றன.

இஃது சித்தர் பெருமக்கள் தந்த மிக உன்னதமான தமிழ் மருத்துவத்தை நாமே அழிப்பதாக அமையும்.

எனவே ஒவ்வொரு பிரதேச, நகர, பட்டின, மாநகர சபைகளும் ஊர்தோறும் சித்த வைத்தியசாலைகளை நிறுவுகின்ற ஒரு பெரும் வேலைத்திட்டத்தை அமுலாக்க வேண்டும்.

இதைச் செய்யும்போது ஏழை மக்கள் மிகுந்த நன்மையடைவர் என்பது சத்தியமான உண்மை.ள

# சட்டவிரோதமாக கொள்கலன்கள் விடுவிப்பு தொடர்புடைய அதிகாரிகள் மீது நடவடிக்கை

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க உறுதி

ஜனாதிபதி விசாரணைக்குழுவின் அறிக்கைக்கமைய துறைமுகத்திலிருந்து கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டதுடன் தொடர்புடைய சுங்க அதிகாரிகளுக்கெதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

இதுகுறித்து மேலும் கருத்துரைத்த அவர் துறைமுகத்திலிருந்து கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமையை அரசியல் மயப்படுத்திய எதிர்க்கட்சிகளின் கருத்துகள் தற்போது பொய்யாகியுள்ளன. முன்னர் அவற்றை மேல் மாகாண ஆளுநருடையவை எனக் கூறியவர்கள் தற்போது அது குறித்து எதுவும் பேசுவதில்லை. 5 மாதங்கள் கடந்த பின்னர் நான் அதற்கு அனுமதி வழங்கியதாக என்மீது குற்றஞ் சுமத்தினர்.

இதனை மத்திய வங்கி மோசடியைப் போன்ற பாரிய பிரச்சினையாக்குவதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. சுங்கத்திணைக்கள தொழிற்சங்கமொன்றுதான் இது தொடர்பில் முதன் முதலில் கருத்துக்களையும் வெளியிட்டது. இதனை அடிப்படையாகக் கொண்டே எதிர்க்கட்சிகள் அரசாங்கத்துக்கு எதிராக போலியான விடயங்களை வெளியிட்டு வந்தன.

எதிர்க்கட்சிகள் மிகவும் கீழ்த்தரமான அரசியலிலேயே ஈடுபடுகின்றன. எவ்வாறிருப்பினும் கொள்கலன் விடுவிப்புத் தொடர்பில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவால் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதற்கமைய சுங்க அதிகாரிகளாலேயே இந்த விடயத்தில் தவறிழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கைக்கு அமைய குறித்த அதிகாரிகள் தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றார். (ம-7)

### யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில்

## தமிழ்மொழித்தின நிகழ்வு

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் தமிழ் மன்றத்தின் ஏற்பாட்டில் "தமிழ்மொழித்தின நிகழ்வுகளானது இன்று வியாழக்கிழமை மு.ப 9.00 மணியளவில் கல்லூரியின் தந்தை செல்வா கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

மன்றத் தலைவர் ஸ்ரீசந்தோஷ் சர்மா தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில் முதன்மை அதிதியாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர் திருமதி. C.S.R. செல்வகுணாளன் அவர்களும் பிரதம அதிதியாக யாழ்ப்பாணப்பல் கலைக்கழக தமிழ்த்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஈஸ்வரநாதபிள்ளை குமரன் அவர்களும் சிறப்பு அதிதியாக பழைய மாணவர் கந்தமூர்த்தி கலாறெஜி அவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்த நிகழ்வில் இசை, நடனம், நாடகம் என முத்தமிழையும் சிறப்பிக்கும் வண்ணம் பல்சுவை நிகழ்ச்சிகள் அரங்கேறவுள்ளன.(ம-7)

## மக்கள் வங்கியின் இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் 64 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு மக்கள் வங்கி யாழ். பிராந்தியமும் இலங்கை வங்கி ஊழியர் சங்கமும் (மக்கள் வங்கிக்கிளை)இணைந்து நடாத்தும் இரத்ததான நிகழ்வானது எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (06) காலை 08.00 மணி முதல் மக்கள் வங்கியின் ஸ்ரான்லி வீதிக் கிளையில் இடம்பெறவுள்ளது. (ம-7)

### சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில்

## இந்துபோர்ட் இராசரத்தினத்தின் 141 ஆவது பிறந்ததின நிகழ்வு

யாழ்ப்பாணம் திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்து போர்ட் சு.இராசரத்தினம் அவர்களின் 141 ஆவது பிறந்தநாள் விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் நாளை வெள்ளிக்கிழமை(4) மாலை 3.00 மணியளவில் சங்கத்தின் ஆராதனை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தலைவர் சத்தியேந்திரன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களும் சிறப்பு விருந்தினராக சிரேஸ்ட நன்னடத்தை உத்தியோகத்தர் விக்னராஜா அவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ம-7)

## மஞ்சவனப்பதி முருகனுக்கு மகா கும்பாபிஷேகப்பெருவிழா

(கொக்குவில்)

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகமானது எதிர்வரும் திங்கட்கிழமை (7) பக்திபூர்வமாக இடம்பெறவுள்ளது.

தேவஸ்தான பிரதம குரு சிவாகம ஞானசாகரம், சிவாகம கிரியா சிரோன்மணி, சிவப்பிரம்மஸ்ரீ விக்கினேஸ்வர குருக்கள் தலைமையில் திங்கட்கிழமை அதிகாலை 3.30 மணி முதல் விசேடபூஜைகள் நடைபெற்று மகாபூர்ணாகுதி நடைபெற்று தீபாராதனை நடைபெறும் நந்து,

காலை 5.45 மணிக்கு சகல ஸ்தூலலிங்கங்களுக்கு கும்பாபிஷேகம் இடம்பெற்று அனுஷ நட்சத்திரமும் துவாதசி திதியும் சித்தயோகமும் கூடிய காலை 6.00 மணிமுதல் 6.45 மணி வரையுள்ள மிதுன லக்கின சுபமுகூர்த்த வேளையில் மஞ்சவனப்பதியுறை வள்ளி தேவசேனா சமேத முருகப்பெருமானுக்கும் விநாயகர் முதல் சண்டேசுவரர் வரையான பரிவார மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது. (ம-7)

### கானகத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த

## கைத்துப்பாக்கி, தோட்டாக்களை கைப்பற்றிய சி.ஐ.டி அதிகாரிகள்

கம்பஹா கந்தானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கந்தவல பிரதேசத்தில் உள்ள வனப்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கைத்துப்பாக்கி மற்றும் 4 தோட்டாக்கள் நீர்கொழும்பு பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

நீர்கொழும்பு பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் இந்தக் கைத்துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட கைத்துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்டவை எனவும் இது தொடர்பில் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் தெரிவித்துள்ள நீர்கொழும்பு பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 04

சொக்கன்

தவிர ஒருவரைக் கோர்ட்டில் நிறுத்தித் தண்டனை வாங்கிக் கொடுத்தால் மற்ற தீவிரவாதிகளுக்கு எப்படிப் பயம் வரும்? நாம் அவர்களுக்குக் கொடுக்கிற அடியில் மற்றவர்கள் இன்னொரு முறைதுப்பாக்கியைத் தூக்கவே யோசிக்க வேண்டும், அதுதான் மொசாட்டின் திட்டம்.

மொசாட் கொடுத்த ஆதாரங்களை அலசிப் பார்த்த கமிட்டி எக்ஸ் தனது முதல் தீர்ப்பை வழங்கியது. வைல் ஸ்வாட்டர்!

பிளாக் செப்டம்பர் இயக்கத்தின் முக்கியப் புள்ளிகளில் ஒருவரான வைல் ஸ்வாட்டர், அப்போது இத்தாலியில் வாழ்ந்து கொண்டிருந்தார். மேல்பார்வைக்குச் சாதாரண அரசாங்க ஊழியர், ஆனால் உள்ளுக்கு ஏகப்பட்ட தீவிரவாத நடவடிக்கைகள், இவருக்குதான் முதலாவதாகக் குறிவைத்தது மொசாட் உண்மையிலேயே வைல் ஸ்வாட்டர் ம்யூனிக் படுகொலையில் பங்கு பெற்றாரா? இல்லையா?

இந்தக் கேள்விக்கு யாருக்கும் நிச்சயமான பதில் தெரியவில்லை. ஆனால், மொசாட் அதைப் பற்றிக் கவலைப்பட வில்லை என்பது தான் உண்மை.

காரணம், தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுகிற அந்த இயக்கங்களை ஆதரிக்கிற ஒருவர் இன்றைக்கு இல்லாவிட்டாலும் நாளைக்கு இதுபோன்ற ஒரு படுகொலையில் பங்கு பெறுவது நிச்சயம். ஆகவே, வைல்ஸ்வாட்டர் அழிக்கப்பட வேண்டியவர், கமிட்டி எக்ஸும் மொசாட்டும் முடிவு செய்து விட்டது, அவ்வளவு தான்.

ம்யூனிக் சம்பவம் நிகழ்ந்து சில வாரங்களில், மொசாட் குழு ஒன்று இத்தாலியின் ரோம் நகரத்துக்குச் சென்று இறங்கியது. வைல் ஸ்வாட்டரைத் தீவிரமாகக் கண்காணிக்க ஆரம்பித்தது.

மொசாட்டின் சாமர்த்தியம், அவர்கள் ஒருவரைப்பின்தொடர்கிறார்கள் என்றால், அது அவருடைய நிழலுக்குக்கூடத் தெரியாது. சில நாள்களுக்குள் அவர்கள் கண்விழிப்பது முதல் தூங்கச் செல்வது வரையிலான அத்தனை நடவடிக்கைகளையும் கச்சிதமாகப் படம் வரைந்து பாகம் குறித்துவிடுவார்கள்.



வைல் ஸ்வாட்டர் ஒரு பிரம்மச்சாரி, அவ்வப்போது தன்னுடைய காதலியைப் பார்ப்பதற்குச் செல்வார் மற்றபடி அவருடைய வீடு உண்டு, அலுவலகம் உண்டு என்று இருக்கிற சமர்த்துப் பேர்வழி.

அவருடைய தினசரி நடவடிக்கைகளைக் கவனித்துப் பார்த்த போது, மொசாட்டுக்கு ஒரு விடயம் புரிந்தது வைல் ஸ்வாட்டரைப் போட்டுத்தள்ளுவ தென்றால் ராத்திரி நேரம் தான் சரிப்படும்.

ஏனெனில் வைல் ஸ்வாட்டர் தினந்தோறும் ராத்திரி ரொம்ப நேரம் அலுவலகத்தில் வேலை பார்க்கிறார். நன்கு இருட்டிய பிறகு நடந்து வீட்டுக்கு வருகிறார். இந்த வழியில் அவரைத் தனியே மடக்கி விட்டால் போதும், சுலபமாகக் கதையை முடித்துவிடலாம்.

இந்தத் திட்டம் மொசாட் மேலிடத்துக்கும் பிடித்திருந்தது. ஜமாய்ங்க என்று பச்சைக் கொடி காட்டி விட்டார்கள், ஆனா மாட்டிக்காம செய்யுங்க வெளிநாட்டு மண்ணிலே இஸ்ரேல் இப்படி ஒரு வேலை செய்கின்றது என்று வெளியே தெரிந்தால் பெரிய சங்கடமாயிடும்.

அவர்கள் திட்டத்தை மீண்டும் பலமுறை புரட்டிப் பார்த்தார்கள். ஓட்டைகளைச் சரி செய்தார்கள் கடைசியாக வைல் ஸ்வாட்டருக்கு நாள் குறிக்கப்பட்டது.

ம்யூனிக் படுகொலைகள் நிகழ்ந்து நாற்பது நாள் கழித்து 1972 ஒக்டோபர் பதினாறாம் திகதி இரவு வைல் ஸ்வாட்டர் அலுவலகத்திலிருந்து வீடு திரும்பிக்கொண்டிருந்தார்.

அவர் தன்னுடைய அபார்ட் மெண்ட் லிஃப்டுக்குள் நுழையப் போகும் நேரம் பின்னால் ஏதோ சத்தம் கேட்டுத்திருப்பினார். இரண்டு மொசாட் ஏஜெண்ட்கள் அவருக்காக காத்திருந்தார்கள். வைல் ஸ்வாட்டர் யோசிக்கக்கூட அவகாசம் கொடுக்காமல் சரமாரியாகச் சுட ஆரம்பித்தார்கள்.

சைலன்ஸர் பொருத்திய துப்பாக்கிகள் யாருக்கும் சத்தம் கேட்கவில்லை குண்டுகளால் துளைக்கப்பட்ட வைல் ஸ்வாட்டர் ரத்த வெள்ளத்தில் கருண்டு விழுந்தார்.

மொசாட் ஏஜெண்ட்கள் துப்பாக்கிகளைப் பத்திரப் படுத்தினார்கள் நிதானமாக வெளியேறி நடந்தார்கள்.

சில மணி நேரம் கழித்து வைல் ஸ்வாட்டரின் மரணச் செய்தி வெளியானபோது அவரை யார் கொன்றார்கள். எதற்காகக் கொன்றார்கள் என்று யாருக்கும் எதுவும் புரியவில்லை. ஒரு சின்னத் தடயத்தைக்கூட விட்டுவைக்காமல் கச்சிதமாக வேலையை முடித்திருந்தது மொசாட்

சிறிது நேரம் கழித்து ம்யூனிக்கில் கொல்லப்பட்ட இஸ்ரேல் வீரர்களின்வீடுகளில்ஃபோன் ஒலித்தது ஹலோ இன்றைக்கு ராத்திரி மறக்காமல் ரேடியோ நியூஸ் கேளுங்கள் எதுக்கு? கேளுங்கள் புரியும்.

அவர்கள் ஆவலுடன் அன்றைய செய்திகளைக் கேட்டார்கள். விடயத்தை ஓரளவு ஊகித்துக் கொள்ள முடிந்தது.

ம்யூனிக் படுகொலைக்கு மொசாட்டின் பதிலடியாக முதல் தலை விழுந்து விட்டது. அடுத்து யார்? எங்கே?

**அதிர்ச்சி அலை 03**

ஹலோ டாக்டர் ஹம்ஷாரி? யெஸ் ஸ்பீக்கிங் நாங்க ஒரு இத்தாலியப் பத்திரிகையிலிருந்து கூப்பிடுகிறோம். உங்களைப் பேட்டி எடுக்க வேண்டும் என்று விரும்புறோம்.

உற்சாகமாக நிமிர்ந்து உட்கார்ந்தார் டாக்டர் மஹ்மூத் ஹம்ஷாரி ரொம்ப சந்தோஷம் நாம எங்கே எப்போ சந்திக்கலாம்?

மறுமுனையில் பேசிக்கொண்டிருந்த மொசாட் ஏஜென்ட்கள் புன்னகையோடு கட்டை விரல் உயர்த்தி சிரித்துக் கொண்டார்கள்.

மிகச் சரியாக, ஹம்ஷாரியின் பலவீனத்தை பார்த்து அடித்தாகிவிட்டது. இனிமேல் அவரை வீழ்த்துவது அத்தனை சிரமமாக இருக்காது.

பாரிஸில் வாழ்ந்து கொண்டிருந்த டாக்டர் மஹ்மூத் ஹம்ஷாரியின் முக்கியமான வேலை, ஊடகங்களில் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தைப் பற்றிய தகவல்களைப் பதிவு செய்வது, பத்திரிகைகள், தொலைக்காட்சிகள், வானொலிகள் என்று எதையும் விட்டு வைக்காமல் பரபரப்புச் செய்து கொண்டிருந்தார் அவர்.

அதனால் தான் இத்தாலியப் பத்திரிகையாளர்கள் அழைக்கின்றார்கள் என்றவுடன் உடனடியாகப் பேட்டிக்குத் தயார் ஆகிவிட்டார் ஹம்ஷாரி. மொசாட் திட்டத்தின் அடுத்த கட்டத்தை நிறைவேற்ற ஆரம்பித்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2026ஆம்...

கெடுக்கச் செய்தல்" எனும் தொனிப் பொருளை அடிப்படையாகக் கொண்டு 2026-2030 அரச நிதிச் சட்டம் மற்றும் அரச நிதி மூலோபாயக் கூற்று மற்றும் தேசிய கொள்கைச் சட்டமான "செழிப் பான நாடு அழகான வாழ்வு" எனும் கொள்கைச் சட்டத்திற்கமைய 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப் படுகின்றது.

2026ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் போது தேசிய கொள்கைச் சட்டத்தில் உட்சேர்க்கப்பட்டுள்ள முன்னுரிமை கள் மற்றும் கிராமிய அபிவிருத்தித் தொடக்க முயற்சிகளுக்கு முன்னுரி மையளிப்பதற்கு எதிர்பார்க்கப்படு கின்றது. (ம-7)

## 'ஸ்டார்லிங்க்'...

கூடியது. இலங்கையில் உள்ளவர் கள் இந்தச் சேவையைப் பெற்றுக் கொள்வதற்கான கட்டணமுறைகளும் வெளியிடப்பட்டுள்ளது.

ஸ்டார்லிங்க் என்பது எலான் மஸ்க் கின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தால் வழங்கப்படும் ஒரு செயற்கைக்கோள் அடிப்படையிலான இணைய சேவை யாகும். (ம-7)

## அடையாளப்படுத்...

கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப் பட்ட மனிதப் புதைகுழிக்கு அருகில் மேலும் புதைகுழிகள் இருக்கலாம் எனச் செய்மதிப் படங்கள் மூலம் சில பகுதிகள் சந்தேகத்தின் அடிப்படை யில் அடையாளப்படுத்தப்பட்டு தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோம தேவாவினால் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

அந்தப் பகுதிகள் நீதிமன்ற உத்தர வுக்கமைய யாழ்ப்பாணப் பல்கலைக் கழக தொல்லியல் துறை மாணவர் கள் மற்றும் நல்லூர் பிரதேச சபை யின் பணியாளர்களின் உதவி யோடும் துப்புரவாக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் நாட்களில் அந்தப் பகுதிகளிலும் அகழ்வு நடவடிக்கைகள் ஆரம்பிக் கப்படவுள்ளன. (ம-7,33,104)

## குழப்பகரமான...

ஞானராஜா தெரிவித்துள்ளார்.

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பாக நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், செம்மணியில் இதுவரை 30 முழுமை யான எலும்புக்கூடுகள் அகழ்ந்தெடுக் கப்பட்டுள்ளதுடன் நான்கு முழுமை யான எலும்புக்கூடுகள் குழப்பகரமான நிலையில் அகழ்ந்தெடுக்கப்பட்டுள் ளது என்றார். (ம-7,33)

## 37 எலும்புக்கூடு...

போதே சட்டத்தரணி ரனிதா ஞான ராஜா இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஏற்கெனவே அடையாளப்படுத்தப் பட்ட 33 மனித எலும்புக் கூட்டுத் தொகுதிகளோடு நேற்று முன்தினம் அகழ்வு செய்து துப்புரவாக்கப்பட்ட எலும்புக்கூடுகளில் புதிதாக நான்கு முழுமையான எலும்புக்கூடுகள் நேற்று அடையாளம் காணப்பட்டு இலக்க மிடப்பட்டது.

இன்றும் இதேபோல முழு நாள் அகழ்வுப் பணிகள் காலை 7 மணி யில் இருந்து மாலை வரை நடை பெறும் என்றார். (ம-7,33,104)

## இரு பிரபல...

தாக பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த அரசாங்கத்தில் அமைச்சர் களாக இருந்து அதிர்ச்சியான நட வடிக்கைகளில் ஈடுபட்ட இருவர் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசா ரணைகளில் கிடைத்த சாட்சியங் களின் அடிப்படையில் இவ்விருவரும் கைது செய்யப்படவுள்ளனர் என்றும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக் குழு அதிகாரிகளால் இவ்விருவரும் கைது செய்யப்படவுள்ளனர் என்றும், இலஞ்ச ஊழல் பற்றி இவ்விருவருக்கு எதிராகவும் கடுமையான குற்றச்சாட் டுகள் முன் வைக்கப்பட்டுள்ளன என் றும் அந்தத் தகவல்கள் தெரிவிக் கின்றன. (ம-7)

## பண்டைய...

லாளர் கலாநிதி நந்திக சனத் குமா நாயக்க மற்றும் இலங்கைக்கான நெதர்லாந்துத் தூதுவர் பொனி ஹோர் பாக் ஆகியோருக்கு இடையிலே கலந்துரையாடல் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

தற்போது நெதர்லாந்தில் உள்ள இலங்கையின் பழங்காலப் பொருட் கள் மற்றும் ஓலைச்சுவடிகளை மீளக் கொண்டுவருவது குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது.

இந்தப் பணியில் இலங்கை அர சாங்கம் வழங்கிய ஆதரவிற்கு தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்ட பொனி ஹோர்பாக், இரு நாடுகளுக் கும் இடையிலான கலாசார உறவு களை வலுப்படுத்த இது ஒரு முக்கிய மான வாய்ப்பாகக் கருதுவதாகவும் தெரிவித்தார்.

காலனித்துவ நாடுகளுடனான ஒத்துழைப்பை வலுப்படுத்த, நெதர் லாந்து அரசாங் கம் காலனித்துவ காலத்து கலைப் பொருட்களை உரிய நாடு களுக்கே மீண் டும் திருப்பி வழங்குவதற் கான கொள்கை முடிவை எடுத் துள்ளது. அதன் படி, அவர்கள் அந்தக் கலைப் பொருட்களை மீள மைப்பதற்கான ஆரம்பமாக ஒரு ஆராய்ச்சித் திட் டத்தைத் தொடங் கியுள்ளதுடன், அந் நாட்டில் உள்ள காலனித் துவ கலைப்பொ ருட்கள் தொடர் பில் கூட்டு ஆய்வு களை மேற் கொள்வதற்கு இலங்கை அதி காரிகளுடன் இணக்கம் காணப்பட்டுள் ளது.

இதன் ஆரம் பமாக இலங் கையின் தேசிய ஆவணக் காப் பகத் திணைக்க ளத்தின் தலை மையில் இரு நாட்டு ஆய்வா ளர்களும் நெதர் லாந்தில் உள்ள ஓலைச்சுவடி கையெழுத்துப் பிரதிகள் குறித்து ஆய்வுகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படு கிறது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட மேல திக செயலாளர் ரோஷன் கமகே, கலாசார அலு வல்கள் தொடர் பான நெதர் லாந்துத் தூது வரின் ஆலோசகர் கிரிஷேன் மெண் டிஸ் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (ம-7)

## சிறுவனின்...

அதன்போது 4 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக் கப்பட்டுள்ள நிலையில் சுமார் 4 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் பின்னிப் பிணைந்து குழப்பகரமான முறையில் காணப்படுவதனால் அவற்றினை அகழ்ந்து எடுப்பதில் அகழ்வுப் பணி களில் ஈடுபட்டுள்ளவர்கள் சவால் களை எதிர்கொண்டுள்ளனர்.

அடையாளம் காணப்பட்ட ஏனைய எலும்புக் கூட்டுத் தொகுதிகளை அகழ்ந்து எடுக்கப்படும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள் ளது. (ம-7,33)


மஹஜன சம்பத
திகதி 2025.07.02
சீட்டிழுப்பு இலக்கம் 5878
R 9 6 7 6 8 5
அத சம்பத
R 7 6 8 5
சீட்டிழுப்பு இலக்கம் 0453
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.07.02
சீட்டிழுப்பு இலக்கம் - 1908
H 19 52 72 75 H
Double Chance 68777

மெகா பவர்
திகதி 02/07/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2226
A 24 32 33 57 80

ஜய
திகதி 2025.07.02
சீட்டிழுப்பு இலக்கம் 0146
Z 6 5 8 2

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4120
சீட்டிழுப்பு திகதி 02.07.2025
O 10 33 36 64
O

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.07.02
சீட்டிழுப்பு இலக்கம் 1187
கடகம் 17 22 37 39 கடகம்
02131 37

உத்தியோகபூர்வ முடிவுகள்
02.07.2025 வெற்றி வாரம் 586
X 0 2 5 2 0 2
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,436,616.80
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2852
சீட்டிழுப்பு திகதி 2025.07.02 தினம் புதன்கிழமை
12 36 38 40 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 72,402,457.00

சனிதா
திகதி 02.07.2025 வெற்றி வாரம் 5013
40 41 43 74 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 70,204,661.20

ஜயோதா Jayoda
திகதி 2025.07.02 வெற்றி வாரம் 2140
35 36 59 61 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 30,224,468.40

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4564
சீட்டிழுப்பு திகதி 02.07.2025 தினம் புதன்கிழமை
07 15 28 35 விருச்சிகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,337,993.00

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
S 09 02 14 55 56
2028 02.07.2025 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.580,553,250.00

புதன்கிழமை
வெற்றி வாரம் : 2678
சீட்டிழுப்பு திகதி : 2025.07.02
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.68,257,840.00
ADA KOTIPATHI
04 25 71 72 G


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எலான் மஸ்க்கிற்கு நன்றி தெரிவித்த ரணில்

இலங்கையர்கள் அனைவருக்கும் 'Starlink' செயற்கைக்கோள் இணைய சேவையை வழங்கியதற்காக அதன் நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி எலான் மஸ்க்கிற்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நன்றி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி, விரைவில் எலான் மஸ்க்கை சந்திக்க ஆவலுடன் இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் டிஜிட்டல் துறைக்கான மேலதிக வாய்ப்புகளை ஆராய இந்த சந்திப்பு நம்பிக்கை அளிக்கும் எனவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு இந்தோனேசியாவின் பாலியில் நடைபெற்ற 10 ஆவது "உலக நீர் உச்சி மாநாட்டில்" கலந்து கொண்டபோது ரணில் விக்கிரமசிங்க எலான் மஸ்க்கை சந்தித்தார்.

இது இலங்கைக்கு 'Starlink' செயற்கைக்கோள் இணைய சேவையைப் பெறுவதற்கான செயல்முறையின் தொடக்கமாகும்.

உலகப் புகழ்பெற்ற தொழிலதிபர் எலான் மஸ்க், தனது "எக்ஸ்" கணக்கில் பதிவிட்டுள்ள செய்தியில், 'Starlink' இணைய சேவை இப்போது இலங்கையில் செயற்பட்டு வருவதாகக் குறிப்பிட்டார்.

இலங்கையில் செயற்கைக்கோள் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இணைய சேவைகளை வழங்குவதற்காக, இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு 2024 ஆம் ஆண்டு 'Starlink' நிறுவனத்திற்கு தொலைத்தொடர்பு சேவை வழங்குநர் உரிமத்தை வழங்கியது.

'Starlink' இணைய சேவை இலங்கையில் தற்போதுள்ள Fibre தொழில்நுட்ப இணைய சேவையை விட பல மடங்கு வேகமானது. (ம-7)

# கட்டுத்துப்பாக்கி வெடித்ததில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(கொழும்பு)

கிரிபாவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தம்மன்னாவ பிரதேசத்தில் கட்டுத் துப்பாக்கி வெடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக கிரிபாவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (01) மாலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் தம்மன்னாவ பிரதேசத்தைச் சேர்ந்த 72 வயதுடையவர் ஆவார்.

இவர் தம்மன்னாவ பிரதேசத்திற்கு சென்றிருந்த போது வன விலங்குகளை வேட்டையாடுவதற்காகப் பயன்படுத்தப்படும் கட்டுத் துப்பாக்கி வெடித்ததில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிரிபாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## சுன்னாகம்...

நேற்று மாலை இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் சுன்னாகம் கந்தரோடையைச் சேர்ந்த 17,18 வயதுடைய இளைஞர்களே உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இளைஞர்களில் ஒருவர் நேற்று முன்தினம் மோட்டார் சைக்கிள் ஒன்றினை வாங்கியுள்ளார்.

இந்நிலையில் அவர்கள் இருவரும் நேற்று மாலை புன்னாலைக்கட்டுவனிலிருந்து சுன்னாகம் நோக்கி புத்தூர் வீதியூடாகப் பயணித்துள்ளனர்.

இதன்போது மாடு ஒன்று வீதிக்கு குறுக்கே சென்றதில் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மின்சாரக் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் இருவரும் படுகாயமடைந்தனர்.

அவசர நோயாளர் காவு வண்டி மூலம் படுகாயமடைந்த இருவரும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளனர்.

இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33,60,104)

## செம்மணி...

செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி விடயத்தில் அரசாங்கத்தின் நிலைப்பாடு தொடர்பில் நேற்றைய அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ,

இந்த விடயம் தொடர்பான வழக்கொன்று கடந்த ஜூன் மாதம் 29 ஆம் திகதி அழைக்கப்பட்டதாகவும் இது தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மற்றும் நீதிமைச்சின் தரப்பில் சமர்ப்பணம் முன்வைக்கப்பட்டிருந்ததாகவும் பதிலளித்தார்.

இந்த வழக்குக்கு அரசாங்கம் பூரண ஒத்துழைப்பு வழங்கும் எனவும், வழக்கு இடம்பெறுவதால் இது குறித்த மேலதிக விடயங்களை தம்மால் தெரிவிக்க முடியாது எனவும் அமைச் சரவைப் பேச்சாளர், அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை செம்மணி பகுதியில் அணையா விளக்கு போராட்டம் இடம்பெற்ற வேளையில் அங்கு சென்ற அமைச்சரவை, அமைச்சர் ஒருவருக்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டமை தொடர்பிலும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அத்துடன் குறித்த அமைச்சருக்கு எதிர்ப்புள்ளதாக முன்கூட்டிய புலனாய்வுத் தகவல்கள் கிடைக்கவில்லையா? என்பது தொடர்பிலும் கேள்வி எழுப்பப்பட்டது.

எனினும், அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இந்த கேள்விக்குப் பதில் எதனையும் வழங்கவில்லை. (ம-7)


## சைவ வித்தியா விருத்திச் சங்கம்
## உடனடி வேலை வாய்ப்பு

**01. நிர்வாக அலுவலர்**

இயக்குனர் சபையின் பரிபாலனத்தில் உள்ள எமது சங்கத்தின் நிர்வாகச் செயற்பாடுகளை நிர்வகிப்பதற்கும் சங்கத்தின் 3 சிறுவர் இல்லங்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கும் தகுதியுள்ள அனுபவம் வாய்ந்த விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நிபந்தனைகள் / அனுகூலங்கள்

- வயதெல்லை 40 – 65
- ஓய்வு வற்ற அரச தனியார் நிர்வாக உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
- கணினி பயன்பாட்டு திறன் கொண்டிருத்தல்.
- கல்வித்தகைமை : க.பொ.த உயர்தரம் சித்தி அல்லது அதற்கு மேற்பட்டது.

**02) இலகு ரக வாகன சாரதி :** நிபந்தனைகள் / அனுகூலங்கள்

- வயதெல்லை 30 – 60
- ஆட்டோ வான் ஆகியவற்றுக்கான சாரதி அனுமதிப்பத்திரம் இருக்கவேண்டும்.
- சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
- கிராமசேவகர் நற்சான்றிதழ் அவசியம்.

**03) விளையாட்டு பயிற்றுனர் (பெண்) :** நிபந்தனைகள் / அனுகூலங்கள்

- வயதெல்லை 25 – 45
- பாலினம் : பெண்கள் மட்டும்
- சம்பளம் : மனித்தியாலக்கொடுப்பனவு
- பகுதிநேர பணி
- கல்வித்தகைமை : க.பொ.த உயர்தரம் சித்தி அல்லது அதற்கு மேற்பட்டது.
- விளையாட்டுத்துறை டிப்ளோமா அல்லது உயர்டிப்ளோமா அவசியமானது.

உங்கள் சுய விபரக்கோவையினை 14.07.2025இற்கு முன்பாக தபாலிலோ, நேரிலோ சமர்ப்பிக்கவும். கடித உறையின் இடது பக்க மூலையில் விண்ணப்பிக்கும் பணியினைக் குறிப்பிடவும்.

த.தவரூபன்
செயலாளர்,
சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி -021 222 6525

(C-3322)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3325)

076 825 7716 (ஆகாஸ்)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## மலிவு விற்பனை

எதிர்வரும் 04.07.2025 (வெள்ளிக்கிழமை), 05.07.2025 (சனிக்கிழமை) ஆகிய இரு தினங்களிலும் கணனி உதிரிப் பாகங்களின் மலிவு விற்பனை இடம்பெறும்.

இடம் - st.Antonys Computer
189, K.K.S Road, Jaffna.

021 222 4865

Sale Sale Sale

(C-3321)

## கனடா - வரி இல்லாமல்
## விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3960/-
11-16 Kg 2790/-
21-30 Kg 2650/-

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள் , எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

UK 11Kg - 1400/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2500/- Australia 11Kg - 1980/- Italy 11Kg - 2260/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237 (C-3324)

## தவறிவிட்டது

30.06.2025 அன்று கொழும்பில் இருந்து வவுனியா வந்த இலங்கை போக்குவரத்து பேருந்தில் (CTB) அநுராதபுரத்திற்கும் வவுனியாவிற்கும் இடையில் (883542711V) தே.அ.அ, சாரதி அட்டை தவறவிடப்பட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இந்த இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். பண நன்கொடை வழங்கப்படும்.

077 082 2237 யாழ்ப்பாணம்

(4695)

## வேலைவாய்ப்புகள்

சாரதி, பாதுகாப்பு உத்தியோகத்தர், கிளார்க், காசாளர், கிளீனிங், வெயிட்டர், விற்பனை, நேஸ், சமையல் வேலைகள், வயறிங், பெயின்டிங், பொதி ஏற்றி இறக்குபவர்

தொடர்புகளுக்கு :
074 083 3368, 077 773 3368

(4688)

## உடனடி வேலை வாய்ப்பு
### நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்: கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, திருகோணமலை, கோப்பாய், பண்டத்தரிப்பு, கொழும்பு, சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர், சங்கானை

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-3324)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org